முரசொலி

3 அணா

முரசு 2 | சென்னை | 22—4—55 | வெள்ளி | ஒலி 4

நாவலர் வாழ்த்துகிறர் !

டாக்டர், ச. சோமசுந்தர பாரதி,
எம். ஏ., பி. எல்.; டி. லிட்.

பசுமலை,
9—4—55.

'முரசொலி' ஆசிரியர் அவர்களுக்கு:

ஐயா,

புரட்சிக்கவி பாரதிதாசர் புதிய தமிழகத்தில் புகழ் பெறுவது இயல்புதானே? அவரை இளைஞர் புத்துணர்ச்சியின் சிகரமாகப் பாராட்டுகிருர்கள் என்பதும், மறுக்கொணு உண்மையன்ருே! புதிய கருத்துக்களும், அவற்றை வெளியிடப் புது நடையில் அதிமதுரப் பாசுரங்களும் நிதம் பலவாய் உதவிவரும் பெருங் கவிஞர் பாரதிதாசர். நூன் மரபும், பழம் புலவர் பரம்பரையின் வழிமுறையும் பின்பற்றிக் கட்டுப்பட்டு, இக்கட்டு இறுக்கங்களுக்காட்படாமல், கருத்திலும் கவிதைத் துறையிலும் விரும்பியபடி நெகிழ்வும் புரட்சியும் நேர்ந்து கையாளும் சொற் சிற்பி பாரதிதாசர். அவர் கவிகள் உருவிலும் திருவிலும், வடிவிலும் வண்ணத்திலும், எண்ணியாங்கு இயற்றும் உரமும் உள்ளமும் உடையவர். ஆக்கமோ அழிவோ ஊக்கிப் புதுமுறை நெறி துறை புகுத்தித் தமிழைப் புதுக்கும் திறமையும் துணிவும் குறைவிலாப் புலவர். வாழ்க அப் பாவலர்! வாழிய புரட்சிக் கவி முறை!!

Best copy available

கவிதை நயத்தால் திராவிடரின் உள்ளங்களைத் திருடிக் கொண்ட பாரதிதாசனுருக்கு 28-7-46—அன்று தமிழகம், பொன்னுடை போர்த்தி நன்றி கூறிய போது, அறிஞர் அண்ணா அவர்கள் சுவை சொட்டும் இந்த எழுத் தோவியத்தைத் தீட்டினுர்கள். எத்தனை முறை படித்தாலும் தித்திக்கும் தெள்ளமுது இந்தக் கட்டுரை! எனவேதான், மீண்டும் ஒருமுறை கவிஞரின் பிறந்த நாளாகிய இன்று இந்தக் கட்டுரையைத் தந்திருக்கிறோம்.

எடா தம்பி, எடுடா பேனா!

அறிஞர் அண்ணா

காளி அருளோ, பவானியின் கடாட்சமோ, கடம்பனின் கடைக்கண் நோக்கோ பெற்றவர்களே கவிகளாக முடியும்; அங்ஙனம் கவிகளானதும் அவர்கள் காவலரின் கொலுமண்டபங்களிலே இருப்பர்; அரசர் அகமகிழ அந்திவானத்தைப் பற்றியும் அலர்ந்த ரோஜா பற்றியும் ஆடலழகியினுடைய அதரத்தின் துடிப்புப் பற்றியும் பாடுவர்; அங்ஙனம் பாடுதல் சிற்றின்பமாமே என்று அஞ்சி, அதனை அரியின் அருள், அல்லது அரனின் திறம் என்னும் மேற்பூச்சுத் தயாரித்து, அதனுள்ளே அமைப்பர்; அவனி காவலர் அக்கவி கண்டு மகிழ்வர், மக்கள், கவியின் திறத்தை மட்டுமல்ல; அவர் கூப்பிடு குரலுக்குத் தேவரும் மூவரும் ஓடோடி வருவர், கவிகள் விரும்பினுல் கல்லை உருகச் செய்வர், புலியைப் பாடச்செய்வர் என்று நம்பி, அடிபணிவர் சில காலத்துக்குப்பிறகு அத்தகைய கவிகளிற் சிலர், கோயில் கட்டிக் கும்பிடத்தக்கவர்களாக்கப்பட்டு விடுவர் கவிகளின் நிலைமை இதுவாக இருந்து வந்தது. கவி ஓர் அபூர்வப் பிறவி; அற்புத ஜாலக்காரன்; கடவுளின் அருள் என்னும் கைக்கோலை வைத்துக்கொண்டு அதன் உதவியால் பிறர் காண முடியாததைக்கண்டு, பிறர் கூற முடியாத்தைக் கூறும் அதிசயச் சக்தி பெற்றவன்; என்று மட்டுமே மக்கள் கூறிவந்தனர்.

புன்னகை பெறுவர் கவிகளைக் கேட்டு; புண்யம் வருமென்பர் அவைகளைக் கேட்டதன் பயனுக; பிறகோ பெருமூச்செறிவர். அவர்போல் நாமென்ன அருள் பெற்றவரா கவிபாட என்று. கவிதை எவ்வளவுக்கெவ்வளவு கடினமானதாக இருக்கிறதோ, புரியாததாக இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அதன் மதிப்பு உயர்ந்து விடும். கவிதையின் கருத்து எவ்வளவுக் கெவ்வளவு மக்களின் அன்ருட வாழ்க்கைக்கும் அறிவுப் போக்குக்கும் தொடர்பற்றதாக இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அதற்கு மதிப்பு அதிகரிக்கும்.

"நீல நிற வானமடி நிர்மலனின் தேகமடி" என்று பாடி இருப்பார் கவி; மக்கள் நீல நிற வானத்தைக் கண்டுள்ளனர் நிர்மலனைக் கண்டதில்லை. புரிந்த ஒன்றைப் புரியாத இன்னென்றுக்கு உவமையாக்குவார் கவி; புரியாது மக்களுக்கு சரியா தவரு என்று. கடவுள் மனம் வாக்குக் காயத்துக்கு எட்டாதவர் என்பதன்ரே முதுமொழி! அம்முதுமொழி உண்மையாயின் நிர்மலனுக்கு உருவம் ஏது? உருவம் இல்லையேல் அதற்கு வண்ணம் கற்பித்து அது நீல நிறம் என்று நிர்ணயிப்பது எங்ஙனம் பொருந்தும்? ஏன் கவி நீல நிற வானத்தையும் நிர்மலனையும் தொடர்புப்படுத்திப் பாடினுர் என்ற குழப்பமான நிலை வரப் பெறுவர் சிலர். ஆனுல், கவி என்ருல் அற்புதம் புரிபவன், ஆகவே அவன் அறிந்தே கூறி இருப்பான்; கவி அருள் பெற்றவன், ஆகவே அவன் கூறினது உண்மையாக இருந்தே தீரவேண்டும் என்று முடிவு செய்துவிடுவர். இதனுல் விளைந்த பயன் என்ன? கவிதைகளைப் போற்ற— பாராட்ட முன்வந்தனரேயன்றி, உணர ரசிக்க இலயிக்க, மக்களால் முடியவில்லை. கலையைக் காட்சிப் பொருளாக்கினரேயன்றி, வாழ்க்கைக்குத் தோழனுக்கிக் கொள்ள முடியவில்லை கவிதையை இந்நிலையில் வைத்திருக்குமட்டும், கவிகளின் ஆழ்ந்த கருத்துரைகளால் ஏற்படவேண்டிய பலன் உண்டாக வழியில்லாமற் போய்விட்டது. புராணங்களில் மட்டுமே குறிப்பிடப்படும் பாரிஜாத புஷ்பத்தை நம் காதலிக்குத் தரமுடியுமோ! அது போலாயிற்றுக் கவியின் நிலை.

இந்த நிலையைக் குலைத்து, எதிர்த்துப் புரட்சி செய்து, கலையைக் கைப் பிடித்திழுத்து வந்து நம் எதிரே நிறுத்தி, "இதோ உன் தோழன்" என்று கூறிப் புரட்சி செய்தவர், அதில் வெற்றி பெற்றவர் பாரதி தாசன்.

பல்வேறு துறைகளிலே நடைபெற்றன புரட்சிகள். தேவ குமாரன் அரசனுகப் பிறப்பான், அவனை ஆண்டிற்கோர் முறையே காண முடியும்; அப்போதும் அளவளாவ அல்ல, அடிதொழவே என்றிருந்த அரசாளும் முறையில் புரட்சி ஏற்பட்டு இன்று ஆலைத் தொழிலாளியும், உலைக்கூடத்து தோழனும், ஊராளும் உரிமை பெற்றுவிட வில்லையா?

வானுலக வீதியிலே சுற்றி, தேவர்தம் வடிவழகைக் கண்டு கூறிவருபவரே கவிஞர், அஃதே கலை என்றிருந்த நிலை மாறி, கவி நம்முடனேயே இருப்பார், நமது உலகில்தான் உலாவுவார், நாம் காண்பனவற்றையே காண்பார், ஆனுல் அவைகளைப்பற்றி நாம் கூறத் தயங்குவோம் இயலாததால்; அவர் கூறுவார், அறிவுத் தெளிவால், கலைத் திறனுல்; இந்தப் புரட்சியைச் செய்தார் பாரதி தாசன்.

புரட்சித்துறையில் ஈடுபட்டவர்கள் பெரிதும், துவக்கத்தில் பூவால் அர்ச்சிக்கப்படுவதில்லை;

★ தொடர்ச்சி 14-ம் பக்கம்

பாரதிதாசன் வாழ்க!

கவிஞர் வாணிதாசன்...

கொல்புலியும் வெருண்டோடும் புரட்சிப் பார்வை!
குளிர்சாரல் மலைவிளைந்த தேனும் பேச்சு!
நல்லஉடல்; உடலினிலே இளமைத் தேக்கம்!
நரைகாணு வளமீசை! மீசை கண்டால்,
எலலோரும் அஞ்சிடுவர்; பிள்ளை உள்ளம்!
எதிர்ப்பெல்லாம் பொடியாக்கும் அறிவுக் குன்றம்!
சொல்லேறு! தமிழ்ச்சோலை அகலாத் தும்பி!
எனதாசான் கவியரசர் வாழ்க! வாழ்க!

விண்ணெத்த பரந்தமனம்! தெளிவின் ஆட்சி!
ஏறுநடை! விஞவிடைக்கோ கிண்டல சொற்கள்!
கண்ணெத்தத் தமிழுக்குக் கெடுதல் என்ருல்
கடுகளவும் பொறுக்காத கொதிக்கும் நெஞ்சம்!
எண்ணத்தின் முழுபொருளை விளகக ஏற்ற
சொல்லெல்லாம் அவரிழுத்த இழுப்புக் கூடி
வண்ணம்செய் தேயடங்கும்; அவர டங்கார்!
மறுமலர்ச்சிக் கவியரசர்! தமிழர் தென்றல்!

"பாட்டிற்கிங் கொருபுலவன்" என்றே பிள்ளை
பாரதியைப் புகழ்ந்திட்டார்; அதுஒவ் வாது
நாட்டிற்கிங் கொருபுலவன்; நமது முன்னோர்
நற்றமிழுக் கொருபுலவன்; மறுமலர்ச்சிப்
பாட்டிற்கிங் கொருபுலவன்; புதுமை ஊற்று!
பாரதிதா சன்வாழ்க! தமிழர் ஒவ்வோர்
வீட்டிற்கிங் கொருபுலவன்; இளைஞர் உள்ளம்
வீற்றிருக்கும் தனிப்புலவன் வாழ்க! வாழ்க!

உண்மைக்கே இருப்பிடமாம்; உண்மை மாற்ற
ஊரெல்லாம் எதிர்த்தாலும் எதிர்க்கும் சிங்கம்!
திண்மைக்கே இருப்பிடமாம்; சங்க காலத்
தீந்தமிழுக் கிருப்பிடமாம்; புதுப்பூங் காட்டுத்
தண்மைக்கே இருப்பிடமாம்; என்றும் அஞ்சாத்
தகைமைக்கே இருப்பிடமாம்; முகிலைப் போல
வண்மைக்கே இருப்பிடமாம்; என்றன் ஆசான்
பாரதிதா சன்வாழ்க! வாழ்க நீடே!!

★ ★



தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 22—4—55 வெள்ளி

புதிய பொதுக் குழு.

நாடெங்கும் திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின் தேர்தல்களும், மாவட்டக் கழகத் தேர்தல்களும், பொதுக் குழு உறுப்பினர் தேர்தல்களும் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்திருக்கின்றன. மாவட்டங்களிலும், கிளைக் கழகங்களிலும் இதுவரை பொறுப்பேற்று செயல் புரிந்த தோழர்களுக் கெல்லாம் ஆங்காங்கே நன்றி தெரிவிக்கப்பட்டு புதிய அமைப்புகள் உருவாகி யிருக்கின்றன. பல இடங்களில் செயலாற்றத் துடித்த தோழர்கள், தேர்தல்களில் கடுமையான போட்டியிட்டிருக்கின்றனர். பொதுப் பணி புரியப் போட்டியிட்டு ஓடிவரும் இந்தப் புதிய நிலை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றிலே ஒரு பொன்னேடு என்பதை யாரே மறுக்க வல்லார்!

இந்த ஊரிலே இத்தனை சுயமரியாதைக்காரர்கள் இருக்கிறார்கள் என்று விரல்விட்டு எண்ணிவிடலாம்—அப்படி ஒரு காலம் இருந்தது; இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு! அந்த நாட்களைத் திரும்பிப் பார்த்து, இந்த நாட்களையும் எண்ணிப் பார்த்தால்—ஆகா—எத்தகைய சந்தோஷப் பெருமூச்சு பிறக்கிறது நமக்கு!

"என்னப்பா—நீ இந்த ஊர் கழகத்துக்குத் தலைவனாக இரேன்—இந்த ஜில்லா செயலாளராக வேலை செய்யேன்!"

"வேண்டாங்க—எனக்கு சொந்த வேலை நிறைய இருக்கிறது—எனக்கு பதிலாக அவரைப் போடுங்கள். நீங்கள் கொஞ்சம் பிடிவாதமாகச் சொன்னால் அவரும் மறுக்க முடியாமல் ஒத்துக் கொள்வார்"

—இப்படி உரையாடல் நடைபெறும் பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு! பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் அந்த நிலையையும், போட்டியிட்டுப் பொறுப்பேற்கத் துடித்து நிற்கும் இந்த நிலையையும் ஒப்பிடும்போது உற்சாக வெள்ளத்தில் நம்மை யறியாமலே வீழ்ந்து விடுகிறோம்.

"இன்னும் நான்கு நாட்கள்தானே இருக்கின்றன. மறுபடியும் ஒருமுறை மாவட்ட உறுப்பினர்களைப் பார்த்து நமக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டுமே"—என்ற அக்கரையோடு மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் நடாத்தி தேர்தல் வேலைகளில் ஈடுபட்டார்கள் தோழர்கள்—என்று கேள்விப்படும்போது ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடாக எதைச் சொல்வது என்றே புரியவில்லை நமக்கு.

"பிழைக்குமா இந்தப் பிள்ளை?" என்று ஜனன காலத்திலே உதடு பிதுக்கிய ஜாதகக்காரர்கள் எல்லாம், இன்று அந்தப் பிள்ளையெழுப்பும் ஜனநாயகக் குரல் கேட்டு—சந்து பொந்து தேடுகின்றனர், ஒளிந்து கொள்வதற்கு!

"இந்தப் பிள்ளைக் கனியமுது — வெறும் பேசும் பொற்சித்திரந்தான்" என்று வர்ணித்தவர்கள் எல்லாம், இன்று வாய்மூடி மௌனிகளாக அமர்ந்து விட்டனர், வாள் சுழற்றி, வண்ணத் திராவிடத்தைக் காப்பாற்ற—அந்தப் பிள்ளை வலிமை காட்ட ஆரம்பித்து விட்டதைக் கண்டு!

முழு நிலா போல், நமது கழகம் முகில் கிழித்து உலவிடும் இந்த நேரத்திலும்—மூலையிலிருப்போர் சிலரின் முணுமுணுப்பு நம் காதில் விழாமலில்லை. கோல நிலா வந்து கொஞ்சுகின்ற இரவாயிற்றே என்று கோட்டான், தன் குரலைக் காட்டாமலா இருக்கிறது? அந்தக் குணங் கொண்டோர் வட்டாரத்தில் கோணல் மொழி கிளம்புவதில் ஆச்சரியமில்லைதான்.

"பார் பார்—போட்டியிட ஆரம்பித்து விட்டார்கள்—இனி அவ்வளவுதான் — புகைந்து போய்விடும்" என்று மன ஆறுதல் பெறும் மதிவாணர்களை நாமறிவோம். காட்டாறுகளையும், கள்ளிக் காடுகளையும், மதயானைகளையும், மலைப் பாம்புகளையும் கடந்து வந்துள்ள நமது பாதையிலே, காலில் குத்தும் நெருஞ்சிமுள் போன்றவர்கள் அத்தகையோர். எடுத்து எறிந்துவிட்டு நமது வழியிலே தொடர்ந்து நடக்க வேண்டும் நாம்.

"போட்டியிட ஆரம்பித்து விட்டார்கள்—இனிப் புகைந்து விடுவார்கள்" என்ற ஆருடம், நமது கழகத்திற்கு வலுவூட்டக் கூடியதேயாகும். சிறு சிறு அபிப்பிராய பேதங்கள் எங்காவது முளைத்திட நேரிட்டாலும், அவைகளையும் சரி செய்து கொண்டு, புகைச்சலை மாற்றியமைத்து - போரணியிலே அணைவரையும் கொண்டு வந்து நிறுத்தும் காரியத்தைச் செய்யும் தன்மை—எதிரிகளின் துஷ் பிரச்சாரத்திற்கு எப்போதுமே உண்டு. ஆகவே அந்தப் பிரச்சாரகர்களுக்கும் நன்றி கூறிக்கொண்டு நமது பாதையிலே, செயலாற்றப் போட்டியிட்ட வண்ணம்—சிறு புகைச்சலுக்கும் இடம் தராத வகையில்—நாம் நடப்போமாக!

ஜனநாயக ரீதியிலே நமது கழகத்தின் கிளைத் தேர்தல்களும், மாவட்ட அலுவலாளர்கள் தேர்தல்களும் நடந்துவிட்டன. வரும் 24-ம் நாள் சென்னையிலே பொதுக் குழு கூடுகிறது. பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்க இருக்கிறது. அத்துடன் மாநில மாநாட்டு வரவேற்புக் குழுவையும் அமைக்க இருக்கிறது. இந்தப் பொதுக் குழு பற்றிய 'யூகங்களை' வெளியிட்டு ஏடுகளின் விற்பனையை அதிகமாக்க விரும்பிய இழிகையோர் சிலரையும் நாடு கண்டிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலே விடுதலைப் போர்க் கொடியை உயர்த்தியிருக்கிற நாம், "எதையும் தாங்கும் இதயமுண்டு" என்ற கீதத்துடன் திராவிடத் தனியரசு காண விரைந்திடும் வேலையைக் கவனிப்போம். வெத்து வேட்டுக்கள், விரோதிகளின் முகாமிலிருந்து கிளம்பிக்கொண்டே யிருக்கும் — அது பற்றிக் கவலைப்படாமல் காரியமாற்றுவோம். கடமை—கண்யம்—கட்டுப்பாடு—அண்ணா தந்த இந்தப் பொன்னான மொழிகளுடன் அணிவகுத்துச் செலவோம்—வாரீர்! வாரீர்! "திராவிட நாடு திராவிடருக்கே!" என்ற முரசு கொட்ட வாரீர்! வாரீர்!-என்று அழைக்கிறோம், வருவீர் என்ற நம்பிக்கையுடன்! ★

இவர் ஏடெடுத்தார் - எதிரிகள் ஓடெடுத்தார்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்களின் பிறந்த நாள் சிறப்பிதழாக இந்தக் கிழமை 'முரசொலி' உங்கள் கரங்களை அலங்கரிக்கிறது. இயக்கத்துப் பெருமக்களின் கட்டுரைகளும், கவிஞர்பால் மதிப்பு கொண்ட அறிஞர்களின் நல்லுரைகளும் இடம் பெற்றுள்ள இந்த இதழ், புரட்சிக் கவிஞருக்கு நாம் காட்டும் நன்றிக்கு அடையாளமாகும்.

வேல் வடித்துக் கொடுத்தோனை வீரர்கள் பாராட்டுவது போல், நாடு மீட்கும் நம் அணிவகுப்பிற்கு போர்ப் பரணி தயாரித்துத் தந்த புலவனை நாம் போற்றுகிறோம்; பாராட்டுகிறோம்!

அவர், கருங்கல் நெஞ்சனை 'கார் கொண்டலே!'—என்று முகஸ்துதி எழுப்பும் ஆஸ்தான கவிஞரல்ல. தலைமறைந்த பின்னர் முதுகுப்புறம் நோக்கி 'நிந்தாஸ்துதி' எழுப்பும் நேசம் மறந்த இனத்தவருமல்ல!

அவரது கவிதைகள் தேக்கிய அமுதச் சுவையின் சேர்க்கை! தாயை இகழ்ந்தவரின் நாவை அறுத்தெறியும் கூர்வாள்!

கோடை இடியென முழங்கும் அவரது கவிதைகள் கேட்டு ஆரியப் பாம்புகளின் காது ஜவ்வுகள் கிழிந்திருக்கின்றன! கூனல் நிமிர்ந்திருக்கிறான்! வீரம் ஜ்வாலையிடுகிற அவரது வார்த்தைகள் கேட்டு, குளிர் மலர்ச் சோலையிலே தளிர் நிகர் மேனியாளோடு தழுவிக் கிடந்தவரெல்லாம், கையிலே கிடைத்த படைக்கலன் ஏந்தி போர்க்களம் குதித்திருக்கின்றனர்!

அவர் சொல்லின் செல்வன்! உயர் எண்ணங்களில் வல்

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

அறிஞர் அண்ணா உடல்நிலை.

பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் நீண்ட நாட்களாக டாக்டர்கள் வலியுறுத்தி வந்ததையொட்டி, 13-ந் தேதி, சென்னை டாக்டர் சுந்தரவதனம் நர்சிங்ஹோமில் அனுமதிக்கப்பட்டு, ஆபரேஷன் செய்து கொண்டார்கள். 'ஐட்ரசில்' எனும் அந்த ஆபரேஷன் சிரமமின்றி நிறைவேறியது. வரும் 22—4—55 அன்று இல்லம் திரும்புகிறார்கள். பொதுக் குழுவிலும் கலந்து கொள்வார்கள்.

செயலாற்றும் காளைகள்-புதிய மாவட்டச் செயலாளர்கள் !

முல்லை-சத்தி
(வட ஆற்காடு-மாவட்டம்)

என். எஸ் இளங்கோ
(தஞ்சை-மாவட்டம்)

கே. டி. எஸ். மணி
(செங்கற்பட்டு-மாவட்டம்)

எஸ். முத்து
(மதுரை மாவட்டம்)

[மற்ற மாவட்டச் செயலாளர்களின் புகைப்படங்கள் அடுத்த இதழில் வெளிவருகிறது]

முரசொலிக்கு வாழ்த்து

திருவாருரில் முதன் முதலாக -- முரசொலி துண்டுத் தாட்களாக வெளிவந்து 1942-ல்/பின்னர் 14-1-48-ல் பொங்கல் திருநாள் முதல் முரசொலி வார ஏடாக வெளிவந்தது திருவாரூரிலிருந்து — அப்போது முரசொலிக்குக் கவிஞர் பாரதிதாசனுர் அனுப்பிய வாழ்த்து இது !

திரைகடல் மீது
பரிதி எழுந்தே
அரசுவீற் றிருந்தான்
அழகொளி வீசி!
வாழிய பரிதி,
வண்மைத் திருநாள்
இந்நாள் பொங்கல்
இட்டு மகிழும்
தென்னாட்டு மக்களின்
திருவென ஓங்கி
'முரசொலி' நாளும்
முன்னேற்றம் எய்திட
என்மன மார
யான்வாழ்த்து கின்றேன்
என்றும் முரசொலி
இனிது வாழியவே.
வீழிய பகைவர் !
நாளும்
வாழிய திராவிட
மக்கள் நன்றே!

—பாரதிதாசன்.

அழியாத கருவூலம் அளிக்கிறார்.

கவிஞர் பாரதிதாசனுர் அவர்கள் திருக்குறளுக்கு எழுதிவரும் உரை—அழியாத கருவூலமாக அமையப் போகிறது. இதுவரை வெளிவந்திராத அத்துணை சிறப்பும், ஆராய்ச்சி முடிவுங்கொண்ட அந்த நல்நூலை தமிழகம் எதிர்பார்த்து நிற்கிறது. அந்த உரைபற்றி நண்பர் **நாரண துரைக்கண்ணன்** அடுத்த இதழில் எழுதுகிறார்.

மற்றும், இவ்விதழில் இடம் பெருத வழக்கமான பகுதிகள் அனைத்தும் அடுத்த இதழில் தொடர்ந்து வெளிவரும்.

[தலையங்கம் தொடர்ச்சி]

லோன்! 'வெடிகள் வெடிக்கின்றன அவரது கவிதைகளிலே!'—என்ற வெறும் பேச்சுக்காரரெல்லாம் அந்தப் பொற்கோட்டு இமயத்து பாத தூசிகளின் திறமைக்கு முன்னே தாளம் போட வேண்டியவர்கள்—என்கிற உண்மை தெரிந்துவிட்ட காரணத்தால், இன்று முக்காடிட்டு உலவுகின்றனர்!

அத்தகைய சிறப்பு வாய்ந்த ஒரு பாவாணரை—மறுமலர்ச்சி இலக்கியத்தின் தூதுவரை—திராவிடம் வாழ்த்துவதில் பெருமை கொள்ள வேண்டும்!

'அன்று வழிகாட்டும் நட்சத்திரமாக இருந்தவர், இன்று பழிதூற்றும் பாவலராக அல்லவோ மாறிவிட்டார்!'—என்று முணுமுணுப்போர்—உதடுகளுக்கு அசைவு தருவோர்—பலர் இன்று நம்மிடையே இருக்கின்றனர். மேம்போக்கான சிந்தனைக்கு அந்தக் குற்றச்சாட்டுகள்கூட ஒரு விதத்தில் பொருள் பொதிந்தனவாகத் தோன்றும். சில சிறு நரிகள்கூட புரட்சிக் கவிஞருக்கும் நமக்கும் இப்போது ஏற்பட்டிருக்கிற பிளவை அகட்டி, வாழ்வுக்கு வழி அமைத்துக்கொள்ள முயற்சிக்கலாம்.

ஆனல் திராவிடத்தின் வானம்பாடி பிறந்த நாளாம் இந்த நாளில் நாம் சில உண்மைகளை நினைவு கூறவேண்டும்.

இன்று பாரதிதாசன் நம்மோடு இரண்டறக் கலக்காமல் அப்பாலிருக்கலாம். ஆனலும் அவரது கவிதைகள்—நாமெல்லாம் சிறைக்கோட்டம் நண்ணியபோது, 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை; நமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை'—என்று துந்துபி முழக்கிய அந்தத் தெள்ளு தமிழ் கீதங்கள்—நம் காதோரத்தில்—இதயத்து அடித்தளத்தில் ரீங்காரம் செய்தபடிதான் இருக்கிறது.

அன்று இந்திப் பெண்ணுள் செந்தமிழ்க் கோட்டத்துக்கு அடியெடுத்து வைத்த காலை, 'செந்தமிழ்க்கே தீமை வந்தபின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ?'—என நெருப்புக் குழம்பைக் கக்கிய அந்த எரிமலை, நேற்று மும்முனைப் போராட்டம் முளைத்தெழுந்தபோது மௌனமாகிவிட்டது.

ஆனலும் நமக்கும் கவிஞருக்கும் உள்ள இந்தப் பிளவு நமக்கும் காமராசருக்கும் உள்ள பிளவைப்போல அவ்வளவு ஆழமானதல்ல! இன்னும் சொல்லப்போனல், நமக்கும், பெரியாருக்கும் இருப்பதைப் போல அந்தப் பிளவு அவ்வளவு அகலமானதுமல்ல!

இது தங்கத் தாம்பாளத்திலே ஏற்பட்டிருக்கிற பிளவு—முறுக்கேறிய நூலிலே அமைந்திருக்கிற தொய்வு! ஒரு நொடியில் உருக்கி ஒன்றுக்கிக்கொள்ளலாம்! அறுக்காமலேயே தொய்வு நீக்கிவிடலாம்!

களத்துக்குப் பயந்து கொண்டு கண்ணீர் வடிப்பவரல்ல, பாரதிதாசன்! போருக்கு அஞ்சி கூடாரம் மாறிவிடும் குணம் கொண்டவரல்ல, அவர்! அவர் அப்படி மாறினல்கூட நாம் அவர் மீது பாயவேண்டியதில்லை; அவரது கவிதைகளே அவரை சுட்டெறித்துவிடும்!

ஏனெனில்; கள்வனைக் கண்டதுண்டமாக வெட்டிவிடும் வலிமை வாய்ந்தவை, அவரது கவிதைகள்! நமக்கு நாட்டுப் பண் அளித்த திராவிட இயக்கத்தின் முதற் கவிஞனை—ஒப்பற்ற இலக்கிய கர்த்தாவை-வாழ்த்துவோம்! பல்லாண்டு கூறுவோம்!

தமிழன்னையின் கழுத்திலே பொன்னரி மாலையாம் பாமாலை சூட்டி மகிழ்வித்தோனுக்கு முரசொலி இந்த இதழ்களைத் தூவுவதில் பெருமை அடைகிறது!

வாழ்க பாரதிதாசன்!
வளர்க அவர் வளர்த்த தமிழ்!

கவிஞர் பிறந்த நாள் - 1891, ஏப்ரல்-17.

1946-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் நாள் கவிஞர் நிதிக்குழுவின் சார்பாக, **அறிஞர் அண்ணா** அவர்களின் பெருமுயற்சியால் பாரதிதாசனுருக்கு இருபத்தையாயிரம் ரூபாய் கொண்ட பண முடிப்பு அளிக்கப்பட்டது. மறைந்த வீரர் **டி. என். ராமன்**, குழுவின் செயலாளராக இருந்து பணியாற்றினர்.

புரட்சிக் கவிஞர்!

"இராவண காவியம்" பாடிய

புலவர்:- குழந்தை...

ஒரு நாட்டின் பெருமைக்குக் காரணமாய் இருப்பவர்களில் புலவர் பெருமக்களே முதன்மையானவராவர். ஒரு நாட்டின் பெருமையின் எல்லை புலவர் நாவேயாகும். புலவர் பெருமக்களின் நாச் செல்வமே ஒரு நாட்டின் பெருஞ் செல்வமாகும். முன்னேற்ற மடைந்துள்ள உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் புலவர் பெருமக்கள் இருந்திருக்கின்றனர். ஆனால், தமிழ் நாட்டிற்போல ஒரே காலத்தில், ஒரே தரமுடைய நூற்றுக் கணக்கான புலவர்கள் எந்த ஒரு நாட்டிலும் இருந்ததாகத் தெரியவில்லை. கடைச் சங்க காலத்தே நானூற்றுக்கு மேற்பட்ட புலவர்கள் இருந்தனர் என்பது பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களால் தெரிகிறது

சங்க காலப் புலவர்களெல்லாம் இயற்கையில் மிக்க ஈடுபாடுடையராய், மக்கள் வாழ்க்கையை அகம், புறம் எனப் பகுத்து, இலக்கியமும் இலக்கணமும் செய்து தமிழர்கள் வாழ்வை வளம்படச் செய்து வந்தனர். சங்க கால அரசியல் சட்டம் புலவர் நாவிற்றான் பூத்துப் பொலிந்தது. சங்க காலப் புலவர்களை அரசியல் புரட்சிப் புலவர்கள் என்னலாம். சங்க காலத் தமிழகத்தை யாண்டவர் தமிழ்ப் புலவர்களே எனல் மிகையாகாது. புலவர்கள் ஆணைப்படியே சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தரும் நாடாண்டு வந்தனர். புலவர் சொல்லை எந்த ஒரு அரசனும் மீறி நடந்ததில்லை. தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டி மன்னன், "புலவர் பாடாது வரைகவென் நிலவரை" என்பதனால், புலவர் பாடுவதை, புலவர் சொல்லை, அக்கால அரசர்கள் எங்ஙனம் மதித்துப் போற்றி வந்தார்கள் என்பது விளங்கும். அக்காலத்தே, புலவர் பாடாத நாடும், அந்நாட்டரசனும் மக்களால் மதிக்கப்படவில்லை என்பது இக்கூற்றால் விளங்கும்.

அரசியல் புரட்சி போலவே அக்காலப் புலவர்கள் சமூகப் புரட்சியும் செய்து வந்தனர். வள்ளுவரையும் கபிலரையும் அத்துறையில் முதல்வராகக் கொள்ளலாம். ஒரு நாட்டு மக்கள் மூடப் பழக்க வழக்கங்களை மேற்கொள்வதற்கும், சீர்திருத்தப் பாதையில் செல்வதற்கும் அந்நாட்டு நீதிநூற் புலவர்களே காரணமாவர். அவ்வாறே, ஆரியக் கொள்கைகள் தமிழ் மக்கள் வாழ்க்கைத் துறையில் புகாமல், அணை கோலிக் காத்த பெருமை வள்ளுவர்க்கே உண்டு. வள்ளுவர் குறள் செய்யாதிருந்திருப்பாரேல், பிற்கால ஆரியப் புராணப் பெருவெள்ளத்தில் மூழ்கித் தமிழர் பண்பாடு மறைந் தொழிந்திருக்கும். அவ்வாறே, ஆரியக் கொள்கைகளை அப்படியே எடுத்துக் காட்டித் தமிழ் மக்களைத் தட்டியெழுப்பிக் காத்தனர் கபிலர். இன்னும் எத்தனையோ சங்க காலப் புலவர்கள் சமூகப் புரட்சி செய்திருக்கின்றனர்.

இத்தகைய புரட்சிப் புலவர்கள் ஒவ்வொரு காலத்தும் தோன்றித் தமிழர்களை விழிப்புறச் செய்து வந்திருக்கின்றனர். பிற்காலத்தே தாயுமானவரும், இராமலிங்கரும் சமூகப் புரட்சியோடு சமயப் புரட்சியும் செய்தனர்.

அப்புலவர் பெருமக்கள், தங்களுக்கு நல்லதெனத் தோன்றியதை, தங்கள் கருத்தை அப்படியே அச்சமின்றி வெளியிட்டு வந்தனர். அதுவே புலவர் பண்பாடாகும். நாம் இவ்வாறு சொன்னால் பிறர் என்னினைப்பாரோ?-பிற்போக்கினர் பிழை கூறுவாரோ?—அரசன் வெகுள்வானோ?—என்று எண்ணித் தன் கருத்தை—நல்லதை—வெளியிட அஞ்சுவோன் புலவனாகான். இத்தகையோர் போலிப் புலவர் எனப்படுவர். தமது புலமையைப் பொது நலத்திற்கு—மக்கள் முன்னேற்றத்திற்கு — பயன்படுத்தாமல், தமது வாழ்வுக்கே பயன்படுத்துவோராவர். தன்னலத்தை எண்ணி நேர்மையின்றிப் பாடுவோரும், கூலிக்குப் பாடுவோரும் புலவர் எனத் தகார். தமக்குத் தோன்றியதை, மக்கள் முன்னேற்றத்திற்குத் தக்கதெனக் கண்டதை, அச்சமின்றி அப்படியே எடுத்துரைப்போனே உண்மைப் புலவனாவான். எதிரியைக் களத்தில் கண்டு அஞ்சாத வன்கண்மையுடைய வீரனை விடப் புலவன் தன் கருத்தைச் சொல்வதில் வன்கண்மையுடையவனாவான். இத்தகைய வன்கண்மையுடைய — அஞ்சா நெஞ்சு படைத்த — புலவர்களால் தான் ஒரு நாடு முன்னேற முடியும். வில் வீரரினும் சொல்வீரரே ஒரு நாட்டிற்கு இன்றியமையாதவர்.

நமது கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பழந் தமிழ்ப் புலவர்களைவிட மிக்க வன்கண்மை யுடையவர் என்னலாம். காரணம், சங்க காலம் நமது கவிஞர் காலம் போன்றதன்று. அன்று தமிழ் நாட்டில் ஆரியம் ஆட்சி செலுத்தவில்லை. சங்க காலத் தமிழர்கள் இன்று போல் அவ்வளவு ஆரியத்திற்கு அடிமையாக வாழவில்லை. தமிழர் வாழ்வு அன்று ஆரியமயமாக்கப்படவில்லை. ஆரியர் அன்றுதமிழர் தொழுங்குலமாக உயர்வு பெறவில்லை. ஆரியர் சொல்வதை தேவாக்கெனஅப்படியே கேட்டுத் தம்மினத்தவரையே எதிர்த்துத் தாக்கும்-தமது நல்வாழ்வு பற்றிக் கூறும் நல்லுரையை எதிர்க்கும் அத்தகைய இழி நிலையில் இல்லை அக்காலத் தமிழ் மக்கள். தமிழ் மக்கள் அன்று தன்னுரிமையுடன் வாழ்ந்து வந்தனர். தமிழர் வாழ்வில் அன்று ஆரிய நஞ்சு அவ்வளவு பரவவில்லை. எனவே, அன்று சமூக சீர்திருத்தம் பற்றிப் பேசுவது அவ்வளவு கடினமானதல்ல. யாரும் எண்ணிய எண்ணியாங்கு எளிதில் எடுத்துரைக்கக்கூடிய நிலையில் இருந்தது சங்க காலத் தமிழ் நாடு.

ஆனால், கவிஞர் பாரதிதாசன் அவர்கள் காலமோ அத்தகையதன்று. ஆரியக் கொள்கையிருள் அப்படியே தமிழ் நாட்டை மூடியிருந்த காலம் அது. ஆரியக் கொள்கையைப் பற்றி ஏதாவது வாயெடுத்தால்—இது ஆரியக் கொள்கை, இது தமிழ்க் கொள்கை என்று தக்க காரணத்துடன் எடுத்துக் கூறினால் வந்தது கெடுபிடி. ஆரியரே பெரும்பாலும், நூற்றுக்கு நூறும் ஆட்சித் தலைவர்களாய் இருந்த காலம். மக்கள் ஆரியரைத் தெய்வமெனக் கொண்டு வணங்கி வந்த காலம். எழுபதாண்டு உயர்குடித் தமிழரொருவர் ஏழாண்டு ஆரியச் சிறுவனைச் 'சாமி' என்று பெருமையாக அழைத்த காலம். ஆரியக் கொள்கைகளை மேற்கொள்வதே பெருமை என நம்பி வந்த காலம். ஆரிய இருளில் மூழ்கித் தமிழர் திசை தெரியாது வாழ்ந்த காலம் அது. சமூக

★ தொடர்ச்சி 14-ம் பக்கம்

பக்தர் சுப்புரத்தினம்

அந்நாளில் கவிஞருக்குக் கடவுள் பக்தி மிகவுண்டு. மைலம் சுப்ரமணியர் ஆண்டுக் கொருமுறை மாசி மகத்திற்காகப் புதுவைக்கு எழுந்தருளுவார். கவிஞர் பக்திப் பெருக்கால் பாமாலை புகழ்ந்து சூடுவார். பஜனைகளுக்குப் பாட்டுகள் இயற்றித் தருவார். பாடுவார். அந்தப் பாட்டுக்களின் தொகுப்பு 1926-ல் "சுப்ரமணியர் துதியமுது" என்ற புத்தகமாக பக்தர்களை மகிழ்வித்தது.

அந்தப் பாடல்களைப் படித்து அவரைப் பெரிய மகானென்று மதித்து நேரில் தரிசிக்க வந்த பக்தர்கள் பலர், பீடியைக் கையில் பிடித்துக் கொண்டு கிருப்புத் தலையுடன் காட்சி தரும் கவிஞரைக் கண்டு ஏமாற்றத்தோடு திரும்பினர். பக்தியின் போக்கு!

—'கவிஞர் மலர்'

மக்கள் கவி

பி. சி. கணேசன்... B.Sc., B.T.

—இராஜன்—

மாலை நேரம்; எங்கும் இன்பமயம். இல்லத்தில் அமர்ந்திருக்கக் கவிஞருக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழில் மிகு சோலை, கன்னியின் கன்னங்களைப் பழிக்கும் சிவந்த வானம், இன்னொலி எழுப்பும் அருவி, இசை வாணிகளின் குரலை இரண்டாம் தரமாக்கும் பறவைகளின் பாடல்— இவையனைத்தும் கவிஞரை வரவேற்றன. காட்சியின்பத்தில் கவிஞரின் மனம் லயித்தது. கற்பனைச் சிறகு விரிந்தது. கவிஞர் எழுந்து நடந்தார். கண் கொள்ளா வனப்பு கவிஞரின் கண் முன் விரிந்து கிடந்தது. இயற்கையோடு இரண்டறக் கலந்து விட்ட அழகை, அவரது கற்பனை பிரித்தெடுத்துச் சுவைத்தது. அந்தச் சுவை கவிஞரின் உள்ளத்தைக் கிறு கிறுக்க வைத்தது. கவிஞரும் இயற்கையும் ஒன்றிக் கலந்து விட்டார்கள்.

★

தென்னந் தோப்பு. குளுமை அங்கு குடி கொண்டிருந்தது. சிட்டுக் குருவிகள் அங்கே சிருங்கார விளையாட்டு விளையாடின. கவிதையின் பிறப்பிடமே சிருங்கார ரசம்தானே! கவிஞர் பார்த்தார். ரசித்தார். ரசனை கவிதையாகப் பரிணமித்தது:

'தென்னை மரத்தில்—சிட்டுப்
பின்னும் அழைக்கும்—ஒரு
புன்னை மரத்தினில் ஓடிய காதலி
'போ, போ' என்றுரைக்கும்'

பறவைகளிலேயே காதலின்பம் துய்ப்பதில் சிட்டு கை தேர்ந்தது. தென்னை மரத்திலிருந்த சிட்டு புன்னை மரத்திலிருந்த காதலியை "வா, வா" என்று வருந்தியழைத்தது. காதலியோ "போ, போ" என்று பிணங்கியது.

பிணங்கிய காதலியை இணங்க வைக்க காதலனுக்கா வழி தெரியாது? வண்ண இறக்கையை விரித்தும், எழில் கொண்டையை அசைத்தும், தன் "கோலத் திருமேனி"யைக் காதலிக்குக் காட்டியது. வசீகரிப்பு முடிந்தது. வார்த்தை ஜாலங்களை அள்ளி வீசியது: "கண்ணே, என் ஏக்கம் நீ நீக்கவில்லையானால், மீளாத் தூக்கத்தில் நான் ஆழ்ந்து விடுவேன். தாமதம் செய்யாதே!" — சிட்டு காதலியிடம் உயிர்ப் பிச்சை கேட்டது. கவிஞரே அதைச் சொல்லட்டும்;

வண்ண இறக்கை—தன்னை
அங்கு விரித்தே-தன்
சென்னியை உள்ளுக்கு வாங்கி
அச்சேவலும்
செப்பும் மணி வாயால்:
'என்னடி பெண்ணே—உயிர்
ஏகிடும் முன்னே—நீ
என்னிடம் வா, என்னையாகிலும்
கூப்பிடு.
தாமதம் நீக்கி விடு'

காதலன் 'உயிர் நீங்கிவிடும்' என்ற கடைசி ஆயுதத்தைப் பிரயோகித்த பின்னும், காதலியின் மனம் சும்மாயிருக்குமா? தென்னைக்குப் பாய்ந்தது. பிறகு...? சில விநாடிகள் தான்.. புன்னைக்குப்பறந்தது! ஆண் சிட்டின் ஆசை தீராதது மட்டுமல்ல; தீப்போலப் படர்ந்தது. பின்னும் அழைத்தது பேடையை. ஊடல் வளர்ந்தது. ஊடல் காமத்திற் கின்பமல்லவா? பாட்டின் போக்கையும் பார்ப்போம்:

என்றிது சொல்லப்-பெட்டை
எண்ணம் உயர்ந்தே-அத்
தென்னையிற் கூடிப்பின்
புன்னையில் பாய்ந்தது
பின்னும் அழைக்கும் சிட்டு.

தோழர் பி. சி. கணேசன், (பி. எஸ். சி., பி. டி.,) அவர்கள் அறிஞர் அண்ணாவைப் பற்றியும், மற்றைய தென்னாட்டு திலகங்களைப் பற்றியும் 'சுதந்தரா' ஆங்கில இதழில் ஒப்பற்ற கட்டுரைகளைத் தீட்டியவராவர். இந்தக் கட்டுரையில் அவர் பாரதிதாசன் கவிதைகளை விமாசிக்கிறார்!

★

கவிஞர் கண்ட முதல் காட்சி இது. சிட்டுவின் காட்சி சிந்தையினின்று மறையு முன்பே, அணில் பிள்ளைகளின் குதூகல விளையாட்டு அவர் கண்ணில் படுகிறது. காதலன் காதலியை வருந்தியழைத்த காட்சி முன்பு. இப்பொழுதோ, ஒதுங்கி நிற்கும் காதலனோடு உறவு கொண்டாட ஓடுகிறது பெண் அணில் ஒன்று.

'கீச்சென்று கத்
தி—அணில்
கிளையொன்றில்
ஓடிப்-பின்
வீச்சென்று பாய்
ந்து தன் காத
லன் வாலை
வெடுக் கென்று
கடிக்கும்'

தெருத் திண்ணையில் படுத்துறங்கும் கணவனைத் "திண்ணையிலே பனி" என்று தன் எண்ணத்தைக் குறிப்பால் உணர்த்தும் மனைவியைப் போல, பெண் அணில் தன்னுடைய எண்ணத்தை ஆண் அணிலின் வாலைக் கடித்து உணர்த்திற்று. ஆணுக்கா தெரியாது அந்த ஜாடை? "சித்திரை மாதத்தில் ஏது பனி?" என்று கேட்காமல், மனைவி சொல்லுக்கு மறு மொழி பேசாமல் உள்ளே செல்லும் கணவனைப் போல, ஆண் அணில் பெண்ணை அணைக்க நெருங்கிற்று. "இன்பம் அனுபவிப்பதில் இல்லை; அதற்காக காத்திருப்பதில்தான் இருக்கிறது," என்பதை அறிந்தோ என்னவோ பெண் அணில் பிணங்கிற்று.

ஆச்சென்று சொல்லி—ஆண்
அணைக்க நெருங்கும்-உடன்
பாய்ச்சிய அம்பென கீழ்த்தரை
நோக்கிப்
பறந்திடும் பெட்டை அணில்!'

வில்லிலிருந்து விடு பட்ட அம்பு போலப் பாய்ந்தது பெட்டை அணில்! ஆசையோடு அணைக்கச் செல்லும்பொழுது பெண் பிடியிலிருந்து தப்பினால், ஆண் பேசாமலா இருந்து விடுவான்? ஆண் அணில் பாய்ந்து அணைத்தது தன்னுடைய காதலியை.

'மூச்சுடன் ஆணோ-அதன்
முதுகிற் குதிக்கும்'

பிறகு,

'—கொல்லர்
காய்ச்சும் இரும்பிடை நீர்த்துளி
ஆகக்
கலந்திடும் இன்பத்திலே'

"காதல் விளையாட்டு" முடிந்த பின் இரண்டும் இன்பத்தில் மூழ்கியே விட்டன. இன்பத்தில் ஒன்றோடொன்று இரண்டறக் கலந்தன என்பதை எந்தக் கவிஞன் இதை விட அழகாக உவமிக்க முடியும்?

★

சிட்டுவின் காதல், அணிற் பிள்ளையின் விளையாட்டு—கண்டு களித்த கவிஞரின் உள்ளம், அந்த இன்ப அனுபவத்தோடு நின்று விடவில்லை. கவிஞர் சாதாரண வர்ணனைக் கவியாக மட்டும் இருந்திருந்தால், காட்சியை வார்த்தைப் படமாக்கியதோடு நின்றிருப்பார். ஆனால், நம் கவிஞரோ புரட்சிக் கவி. காட்டிலே கண்ட காட்சியை நாட்டின் நடப்புகளோடு ஒப்பிட்டு நோக்கினார். ஆகா, நாட்டு வாழ்க்கையை விட இந்தப் பிராணிகளின் சம்பிரதாயமற்ற காட்டு வாழ்க்கை எவ்வளவு மேலானது என்று அவர் மனம் எண்ணிற்று. கவிஞர் எண்ணினால், அது எண்ணமாக மட்டுமா இருக்கும்; பாட்டாகக் கிளம்பியது. பாட்டு ஏட்டிலே பதிந்தது.

'எச்சுக்கள் அச்சம்-தம்மில்
எளிமை வளப்பம்-சதிக்
கூச்சல் குழப்பங்கள் கொத்தடிமைத்
தனம்
கொஞ்சமும் இல்லை அங்கே!'

★

இம்மாதிரி சிந்தனைகளால் உந்தப்பட்டு கவிஞர் மேலே நடந்து கொண்டிருந்தார். இயற்கைக் கன்னி ஊட்டிய போதையிலிருந்து அவர் அவ்வளவு சுலபத்தில் தெளிவு பெற்றுவிட முடியுமா என்ன? வான வெளியைப் பார்த்தார். பெரியோர்களின் உள்ளம் போல்—இல்லை, இல்லை—அறிஞனின் எண்ணங்கள் போல்—விரிந்த வானம் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

'எண்ணங்கள் போலே—விரி
வெத்தனை! கண்டாய்'

அதிலும் அந்தி வானம். அழகுக்குக் கேட்கவா வேண்டும்? காதலன்வரவு கண்டு நாணமுற்ற கன்னியின் கன்னங்களில், கள் வெறியோடு காதலன் முத்தமிட்டால், கன்னங்கள் கன்றிச் சிவக்குமே, அப்படித்தான் அந்தி வானமும் சிவந்திருந்தது. சிவப்புநிறம் மட்டுமா? இன்னும் எத்தனை எத்தனையோ வர்ணங்கள். கவிஞரால் கணக்கிட முடியவில்லை. ஆகவே பொதுவாகச் சொல்கிறார்:

'—இரு
கண்ணைக் கவர்ந்திடும் ஆயிரம்
வண்ணங்கள்
கூடிச்சுடர் தரும் வான்!'

அந்தி வானம் அழகைக் கொட்டியது. கார் முகில்கள் அழகை அப்படியே அள்ளி விழுங்கின. அழகு அருகில் இருந்தால் யார் தான் அதை விட்டுவைப்பார்கள்? அழகை உண்ட மேகம் அந்தக் களிப்பில் ஆரவாரம் செய்தது. விழுங்கிய மாலைவான அழகை, மின்னலாக உமிழ்ந்தது; வான வில்லாக வாரி வழங்கியது. முகில் கூட்டங்கள் கூடி விட்டன. 'சில்'லென்ற காற்று மழைக்கு முன்னோட்டம் காட்டியது. இத்த நேரத்தை மயில்கள் அனுபவித்தன. சிறகு விரித்தாடின. இந்த ரம்மியமான காட்சியைக்கண்டு மல்லிகை மலர்கள் போதவிழ்ந்து சிரித்தன. வானமும் அமுதப் பிரவாகத்தை நீர் முத்துக்களாகச் சொரிந்தான்.

○ தொடர்ச்சி 12-ம் பக்கம்

தமிழ் நாட்டு 'வால்ட் விட்மன்'!

கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ் நாட்டின் தலை சிறந்த கவிஞர்களில் ஒருவர்; காலஞ்சென்ற பாரதியாரின் பிரதம சீடராவார். பாரதியாரின் பாடல்கள் தமிழ் மக்களின் உள்ளத்தில் சுதந்திர உணர்ச்சியை உண்டு பண்ணினது போல பாரதிதாசனுடைய பாடல்கள் சமூகச் சீர்திருத்த உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி வருகின்றன என்றால் அது மிகையாகாது. இனிய எளிய நடையிலுள்ள இவரது பாக்கள் படிப்போருக்கு இன்பம் பயக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. மதங்களிலும், பழைய ஆசாரங்களிலும் ஊறிக் கிடந்த மக்களிடையே இவருடைய பாடல்கள் ஒரு பெரிய மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கின்றன. ஆதலால் இவர் ஒரு புரட்சிக் கவி. அமெரிக்கப் புரட்சிக் கவி வால்ட் விட்மன். தமிழ் நாட்டுப் புரட்சிக் கவி பாரதிதாசன்! இக் கவிஞரைப் பல துறையிலும் பாராட்ட வேண்டியது தமிழ் மக்களின் முதற் கடமையாகும்.



கவிஞர் பாரதிதாசன் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, தமிழ் நாட்டுக்குப் பொருந் தொண்டு செய்து வருவாராகுக!

—கவிமணி தேசிக விநாயகம்.

எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்!

இரா. நெடுஞ்செழியன், M.A.,

புரட்சிப் புன்னகையில் மலர்ந்து பொலிவு பெற்றுவரும் உலகம், புரட்சி வீரர்களைக் காலந்தோறும் கண்டு வருகிறது. காட்சிப் பொருளும் கருத்துப் பொருளும், தாம் நின்றதொரு நிலையிலிருந்து தேவைக்கேற்ற வண்ணம் நல்ல முறையில் சிறந்த நிலைக்கு மாறும் தன்மையைப் புரட்சி என்கிறோம். ஒவ்வொரு துறையிலும் படிப்படியாக ஏற்பட்ட புரட்சியின் விளைவால்தான் இயற்கை உலகில் செயற்கைக் காட்சிகள் கவின்பெற இலங்கக் காண்கிறோம். பொதுவாக உலகம், பொருள்களிடத்தே ஏற்படும் புரட்சியினால் உருக்கொள்ளுகின்றது; பொருள்கள் மக்கள் செயலாற்றலில் ஏற்படும் புரட்சியினால் உருமாறுகின்றன; செயலாற்றல் மக்கள் சிந்தனையில் ஏற்படும் புரட்சியினால் உருவடைகின்றது என்பதை நன்கு அறிகிறோம். எனவே மக்களின் சிந்தனையைப் பொறுத்துத்தான் செயற்படு உலகம் ஒவ்வொரு துறையிலும் உருக்கொள்ளுகின்றது என்பது பெறப்படுகின்றது. அப்படிப்பட்ட அடிப்படைக் காரணமாக அமைந்த மக்கள் சிந்தனையில் புரட்சியைச் செய்யும் வீரனைத்தான் உலகம் மிக மிகப் போற்றிப் புகழ்ந்து வந்திருக்கிறது. சிந்தனையைக் கிளறும் எழுதுகோலைத் தாங்கிய வீரனைப் போற்றிய அளவுக்கு உலகம் இதுவரையில் வேறு யாரையும் போற்றியதில்லை. ''வாளினும் வலிது எழுதுகோல்' என்பது ஆங்கில நாட்டுப் பழமொழி. ''வில்லேருழவர் பகை கொளினும், கொள்ளற்க சொல்லேருழவர் பகை'' என்பது வள்ளுவன் வாய்மொழி. சிந்தனையைச் சீர்படுத்தும் சிந்தனைச் சிற்பிகளிலே தலைசிறந்து விளங்கும் வீரன் கவிஞனாவான். அவனைத்தான் புரட்சிக் கவிஞன் என்று உலகம் போற்றும். வெறும் கவிதைகளைப் பாடுபவன் கவிஞனாகலாமேயொழிய அவன் புரட்சிக் கவிஞனாகமாட்டான். இருக்கின்ற நிலையிலிருந்து உயர்ந்த சிறந்த அழகிய அறிவுடைமையோடு கூடிய நிலைக்கு மக்களுள்ளத்தை இழுத்துச் செல்லுகின்றவனே புரட்சிக் கவிஞனாகக் கருதப்படுகிறான். முதல் சிந்தனைச் சிற்பியின் உள்ளத்தே எழுந்த 'ஏன்?' என்ற கேள்வியின் எதிரொலி உள்ளங்கள் தோறும், இடத்துக்கு இடம், நாட்டிற்கு நாடு, காலத்திற்குக் காலம் மாறி மாறி அடுத்தடுத்து ஒலிக்கவே உலகம் வளர்ச்சியடையத் தொடங்கிற்று. உலக இயல்பை அப்படியே படம்பிடித்து உள்ளத்தே இருத்தி, ஏன் என்று கேட்டு, அதற்கு மெருகிட்டு, வேண்டும் அளவுக்குத் திருத்தி அவ்வண்ணமாக உலகைக் காண விழைகிறான் புரட்சிக் கவிஞன். தமிழகத்தில் தோன்றி வாழ்ந்து மறைந்த கவிஞர் எண்ணிறந்தோர் என்றாலும் அவரெல்லாரிடத்தும் அமையப் பெறாத புரட்சிக் கவிஞனுக்குள்ள புலமை, பாரதிதாசன் ஒருவரிடத்தே அமையப்பெற்றபடியால் அவரைப் புரட்சிக் கவிஞர் என்று போற்றுகிறோம். பாரதிதாசனை புரட்சிக் கவிஞராக ஆக்கியது அவரது சூழ்நிலையேயாகும். ரஷ்யா ஒரு புஷ்கினையும், ஆங்கில நாடு ஒரு ஷெல்லியையும், பிரான்சு ஒரு ஹ்யூகோவையும், அமெரிக்கா ஒரு வால்ட் விட்மனையும் கண்டவாறு திராவிடமும் ஒரு பாரதிதாசனைக் கண்டது.

கவிஞனுள்ளத்தோடு தோன்றிய கனக சுப்புரத்தினம் பாரதிதாசனாகி, தீந்தமிழ்த் தேன் மாந்தித் தம் தாய்நாட்டின் பெருமைதன்னை, நல்ல மணிநதியை, உயர்குன்றை, தேனை அள்ளிப் பெய்யும் நறுஞ் சோலையினை, வீசு தென்றலைப் பாடினார்; பாடி மக்களுள்ளத்தை அவற்றிலே படியவைத்தார். நாட்டின் மண்வளத்தைக் கண்டு களிப்பெய்திய பாரதிதாசன் மக்களின் வளத்தைக் காணத் தம் கண்களைத் திருப்பினார். நாடிழந்து நலமெலாமிழந்து அரசிழந்து அழகெலாமிழந்திருக்கும் தம் மக்களின் தாழ்நிலையைக் கண்டார். வாளோச்சி வாழ்ந்த தமிழ் மறவர் வீணரின் தாளடியிலே வீழ்ந்து கிடந்ததைப் பார்த்தார். உள்ளம் குமுறிற்று. குமுறிய உள்ளம்,

''நாயினுங் கீழாய்ச் செந்தமிழ்
நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓயுதல் இன்றி அவர்நலம்
எண்ணி
உழைத்திட நான் தவறேன்''

என்ற உறுதிமொழி கூறி எழுந்தார்; எழுந்து,

''தமிழரின் மேன்மையை
இகழ்ந்த வனைஎன்
தாய் தடுத் தாலும் விடேன்
எமைநத்து வாயென
எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும்
தொடேன்''

என்று வஞ்சினங் கூறிப் பாசறை புகுந்த கவிஞர் பகுத்தறிவு வாளேந்திப் பகைப் புலங்கள் பலவற்றையும் அழிக்கத் தொடங்கினார். அழிக்கத் தொடங்கவே புதுமைக் கவிஞர் புரட்சிக் கவிஞரானார்.

வேங்கைகள் உலவிய தம் தாய்நாட்டில் நரிகள் உலவக் கண்டார். வாளேந்தி வாழ்ந்த மக்கள் வகையற்றோரின் தாளேந்தி நின்றனர். அறிவும் திறனும் செறிந்திருந்த நாட்டில் மடமையும் மருளும் சூழ்ந்தன. கைவிரித்துவந்த கயவர், மக்களிடத்துப் பொய்விரித்து அவரின் உரிமையெலாம் பறித்து வாழலானார். ஏற்றம் மிகுந்திருந்த நாட்டில் இழி கழுதை ஆட்சி வளர்ந்தது. இவற்றையெல்லாம் கண்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், உறங்கிக் கிடக்கும் தமிழர்களின் உள்ளத்தே சொல்லம்புகள் ஊடுருவிப் பாயச்செய்தார். 'சிம்புட்பறவையே சிறகை விரி, எழு, சிங்க இளைஞனே திருப்பு முகம், திறவிழி' என்றார். 'உங்கள் குகையினை விட்டே வெளி வருவீர் சிங்கங்காள்!' என்று கூறி இளைஞர் கூட்டத்தை வரவேற்று எதிர்நோக்கி நிற்கிறார்.

காலத்திற்கேற்ற கருத்துக்களை கவிதையின் மூலம் குழைத்தூட்டியே மக்களை மக்களாக ஆக்கினார்கள் மற்றை நாட்டுப் புரட்சிக் கவிஞர்கள். அரசனையும் ஆண்டவனையும் மட்டும் பாடும் பணியில் கவிஞர்கள் ஈடுபட்டிருந்த காலம் ஒன்று இருந்தது. மதுவோடும் மங்கையோடும் கொஞ்சும் மன்னன், கடமை பொருந்திய திருவிளையாடல்களைச் செய்த ஆண்டவன், இவர்கள் கவிஞனின் பாட்டுடைத் தலைவர்களாக விளங்கினார்கள். அந்தக் காலங்களில்தான் மக்களின் ஆயுள் அரசனுக்கும், அறிவு ஆண்டவனுக்கும் அடிமைப்படுத்தப்பட்டன. அவைகளில் மக்கள் உள்ளம் ஊறத் தொடங்கிய பிறகுதான் அறிவு வளர்ச்சிக்கான வழிகளில் தடைகள் ஏற்பட்டன. ஆகவேதான்,

''இருட்டறையில் உள்ளதடா
வுலகம்
சாதியிருக்கின்ற தென்பானும்
இருக்கின் றானே
மருட்டுகின்ற மதத்தலைவரும்
வாழ்கின் றாரே
வாயடியும் கையடியும்
மறைவ தெங்கான்
சுருட்டுகின்றார் தம்கையில்
கிடைத்த வற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று
சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே
இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும்
ஒன்றே யாகும்''

என்று அறிவுரை பகன்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அறிவும் திறனும், அழகும் எழிலும், மலையும் மடுவும், சோலையும் சாலையும், வளமும் வகையும், மக்களின் பண்பும் பழக்க வழக்கமும், கொள்கையும் கோட்பாடும் பாடல்களின் பொருள்களாக மிளிர்ந்துவந்த நாட்டிலே, கவிஞர்கள் கயமை நிறைந்த கடவுட் புராணங்களைப் பாடி மக்களை மடமைச் சேற்றில் அழுந்தச் செய்த தன்மையைக் கண்டார். கண்டு வெகுண்ட புரட்சிக் கவிஞர்,

★ தொடர்ச்சி 16-ம் பக்கம்

கோழை வேஷத்திலே வீரன்!

''தென்றிசையைப் பார்க்கின்றேன்; என்சொல்வேன் என்தன் சிந்தையெலாம், தோள்களெலாம் பூரிக்குதடடா!''—என்று தென்னிலங்கை வேந்தனின் கீர்த்தி பாடியவர், ''கீழ்ச் செயல்கள் விடவேண்டும்! ராவணன்தன் கீர்த்தி சொல்லி அவன் நாமம் வாழ்த்த வேண்டும்''—என்று இராவணனின் புகழ் பாடியவர், ஒரு காலத்தில்—பள்ளிக்கூட நாடகத்தில்-திராவிட இனத்தின் மாபெரும் எதிரியாம் இராமனது வேஷம் தாங்கி நடித்தாராம். இதோ அந்த விபரம் :

மகாவித்வான் பு. அ. பெரியசாமிப் புலவர் கனகசபை முதலியாரின் நெருங்கிய நண்பர். அவரின் தூண்டுதலினால் அவரது மாணாக்கரும் தமிழ்ப் பண்டிதருமான திருப்புளிசாமி வாத்தியாரின் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார் நமது சுப்புரத்தினம்.

இவரது படிப்பின் திறத்தையும், பண்பையும் கண்ட திருப்புளிசாமி வாத்தியார் இவருக்குச் 'சட்டாம் பிள்ளை'ப் பதவியைக் கொடுத்தார். அத்துடன் பள்ளியின் சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும் குசேல உபாக்யானம், பாதுகா பட்டாபிஷேகம் முதலிய நாடகங்களில் தலைமை நடிகரென்ற பொறுப்புடன் நாடகத்தை நடத்தும் பொறுப்பாளியாகவும் இருந்துவந்தார். குசேலனும் ராமனுமாகத் தோன்றிய சுப்புரத்தினம், சுசீலையும் சீதையுமாகவும் தோன்றியிருக்கிறார். எதிலும் பொருத்தமான நடிப்பு.

— 'கவிஞர் மலர்'

1942-ம் ஆண்டு—அப்போது எனக்கு வயது பதினெட்டு. திருவாரூரில் நான் நடத்தி வந்த தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற ஆண்டு விழாவுக்கு கவிஞர் அவர்களிடம் வாழ்த்து பெறஎண்ணினேன் அப்போதெல்லாம் அவருக்கும்எனக்கும் நேரடியாக அறிமுகமில்லை. கடிதம் எழுதினேன். "வாழ்த்து அனுப்புங்கள். அலட்சியமாக இருந்து விடாதீர்கள்" என்று அதில் குறிப்பிட்டிருந்தேன். கவிஞரிடமிருந்து வாழ்த்து வந்தது. அதன் கீழே அவர் எழுதியிருந்த வார்த்தைகளை என்னால் இன்னும் மறக்க முடியவில்லை:

"தோழர் கருணாநிதியே! கேட்ட வண்ணம் தீட்டினேன்-தெரிந்த வரைக்கும். அலட்சியமாக இருந்து விடுவதுண்டு; வாரம் ஒன்றுக்கு இருபது ஒன்றரையணா தபால் செலவை எண்ணி."

என்ன பொருள் இதற்கு? அவரிடம் வாழ்த்து கேட்பவர்கள் எல்லாம் தபால்தலைகள்கூட வைத்து அனுப்புவதில்லையாம்—அதைப் போலவே நானும் அனுப்பவில்லையாம்—அதை அவ்வளவு அழகாகக் கிண்டல் செய்து விட்டார். கவிஞர். கவிகளுக்குப் பொன்னும் பொருளும் அளித்து மகிழ்ந்த மன்னவர்களின் காலம் மாறிவிட்டதையும் கவிஞரின் அந்தக் கிண்டலான வரிகள் நினைவூட்டின.

பணம் அனுப்பும் நிலையா எனக்கு—என்ன செய்தேன் தெரியுமா? புத்தகம் வாங்க வேண்டுமென்று வீட்டில் பணம் வாங்கி, அதற்கு இருபது ஒன்றரையணா தபால் தலைகள் வாங்கி கவிஞருக்கு அனுப்பி வைத்தேன். இந்த வேடிக்கை நிகழ்ச்சியை விளைவித்த கவிஞரின் வாழ்த்து கீழே தரப்படுகிறது—படியுங்கள்.

[மு. க.]

தண் பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு, தமிழ் மாணவர் மன்றங்காண்!
வண்மையோடும் உண்மையோடும் வாழ்ந்திடுங்காண்!
மக்களிடை எழுச்சிக்கு மருந்தா குங்காண்!

கண்மூடிக், குறிமறந்து, தமிழர் தங்கள்
கலைமறந்த நெஞ்சத்தில் ஒளி யெய்துங்காண்!
புண்வாய்ந்தோர் அல்லர்காண்! திருவாரூரின்
புலி இளைஞர்காண்! தோள்கள் பூரித்தார்காண்!

எழில் மன்றச் சட்டத்தை உயிரைப் போலே
எண்ணி அந்த வண்ணமே நடப்பார் கள்காண்!
ஒழித்தார்காண் அயர்வுதனை! அவர்கள் நாளும்
உயர்கவிதைச் சுவைதன்னில் தோய்ந்திட் டார்காண்!

மொழியினிலே தமிழ் மொழியே உயர்ந்ததென்றும்
மூச்செல்லாம் தமிழுக்கே என்றும், நல்ல
வழியறிந்து விட்டார்காண்! முத்தமிழ்க்கு
மடை கோலி விட்டார்காண் உலகில் பாய்ச்ச !

கிளம்பிற்றுகாண் தமிழச் சிங்கக் கூட்டம்!
கிழித்தெறிய தேடுதுகாண் பகைக் கூட்டத்தை!
வளம் பெரிய தமிழ்நாட்டில் தமிழரல்லார்
வால் நீட்டினால் உதைதான் கிடைத் திடுங்காண்!

"தளும்புதுபார் பத்தியென்றும், போகமென்றும்,
சாமிஎன்றும், முழுமிஎன்றும், எழுதிப், பேசி,
புளுகிடுதல்" இனிப்பலிக்க வழியில்லைகாண்!
புதுவாழ்வு மலர்ந்ததுகாண் தமிழ்நாட் டின்காண்!

— பாரதிதாசன்
21-11-42

என்னைத் தெரியுமா உங்களுக்கு? நான்தான் சுந்தரவதனத்தின் சொகுசு சுந்தரியாக இருந்து. இன்று சோக சுந்தரியாக இருக்கும் சுசீலா! உம்...நான் என்ன பந்தநல்லூரார்சிஷ்யையா, கந்தர்வகான கோகிலமா, என்னைப் பற்றி தெரிந்து கொள்ள? ஒரு வேளை, கொலைகாரி சுசீலா என்றாவது கேள்விப்பட்டிருப்பீர்கள். 'தகிடுதத்தம்' பத்திரிகைகூட "கொலைகாரி சுசீலா; கணவனை சுட்டுக் கொன்ற காதகி"—என்று முதல் பக்கத்திலேயே பிரசுரித்திருந்ததே! என்னுடைய அப்பீல் தோற்றுவிட்டது-கீழ்க் கோர்ட் தண்டனையே ஊர்ஜிதமாக்கப்பட்டதென்று சிறை அதிகாரி வந்து சொன்னார். இந்த முடிவு எனக்கு முன்னமே தெரிந்ததுதான் — கொலை செய்த எனக்கு மாலையா சூட்டுவார்கள்? "ஒழிக்கப்பட வேண்டியவள்—அழிக்கப்பட வேண்டிய பழிகாரி—உலக மேடையில் உலவக்கூடாது இந்த சரசி—மக்கள் மன்றத்தில் நடமாடக் கூடாத நாசகாரி—கணவனையே கொன்ற காதகி—பெண் குலத்தின் பத்திரகாளி-சமுதாய துரோகி—கொலைகாரி"—இத்தகைய சிறப்புப் பட்டங்களைப் பெற்றவளை விடுதலையா செய்வார்கள்?

இன்னும் சில நாட்களில், 'மின்னும் வைரம் உன் தேகம்—இன்பத்தின் எல்லை நீ தரும் சுகம்—பொன்னார் மேனியாளே! கன்னல் மொழியாளே! தேனே! மானே'—என்றெல்லாம் வர்ணிக்கப்பட்ட என் உடல் தூக்குக் கயிற்றில் ஊசலாடப்போகிறது. முடிவில்லா மோன நிலையில் அமிழப்போகும் என்னை எப்போதும் சிறையில் மூடியே வைக்கின்றனர். காலைக் கதிரவனின் உதயத்தையும்—மாலை ஆதவனின் அஸ்தமனத்தையும் காண சிறிது நேரம் என்னை சுதந்திரப் பறவையாக விடுகின்றனர். இயற்கையின் எழிலைக் கண்டு ரசிக்க அல்ல, இயற்கையின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள! சாதாரண கைதிகளை விட 'அழிக்கப்பட வேண்டிய கைதி'களின் பட்டியலிலே சேர்க்கப்பட்டுள்ள எனக்கு கட்டும் காவலும் அதிகம்தான்.

இன்னும் சில தினங்களுக்குதான் இந்த காவற்காரர்களையும், சிறை கம்பிகளையும், என் அறைக்கு எதிரில் உள்ள வேப்ப மரத்தையும், பூசனிக் கொடியையும், ஏன் — இந்தப் பரந்த வையகத்தையும் காணப் போகிறேன். என் வாழ்வு இந்தக் கூண்டில் அடைந்துவிட்டது....சில நாளில்....நானே மறைந்துவிடுவேன்........என்னைப் பெற்றெடுத்த இந்தப் பூமி மாதாவின் மடியிலே ஒளிந்து கொள்வேன்—மண்ணிலிருந்து மறைந்துவிடும் என் பெயரும்!

பொல்லாத இரவு வந்துவிட்டது ...என்னைக் கொல்லாமல் கொல்லுகிறது....அனுபவத்தில் உதிர்ந்த முத்துக்கள் — சத்தான வார்த்தையின் கோர்வை, என் வாழ்விலேயே நிகழ்ந்துவிட்டது. துன்பச் சுமைகள் குவிந்திருக்கிறது என் உள்ளத்தில். மரண தேவதையின் மடியில் மீளா துயில் கொள்ளப்போகும் எனக்கு தூக்கம் எப்படி வரும்? ஏக்கத்தின் அதிகாரம் ஆதிக்கம் செலுத்தும்போது தூக்கத்திற்கு அங்கென்ன வேலை!

இருள் கவ்வியிருந்த என் அறையில் மின்சாரம் ஒளியைத் தந்தது.

இருண்டு போயிருந்த என் வாழ்க்கையில் ஒளி வீசும் தெய்வமாகத்தான் வந்தார் சுந்தரவதனம். அவரின் சுந்தர முகமும்—சோபித பேச்சும் என்னை அவருக்கு சொந்தமாக்கி விட்டது — நான் அவர்மேல் கொண்ட பந்தமும், பாசமும், அன்பும், ஆசையுமே—அவருக்கு எமனாக முடிந்துவிட்டது; என் வாழ்க்கையையும் பாழாக்கி விட்டது. கனகமணிக் கட்டிலிலே—காதல் கீதம் பாட வேண்டிய நான், காராக்கிரகத்திலே—கட்டாந்தரையில் புரளுகிறேன்! இன்ப வானத்தில் என் இதய ராஜாவோடு—இன்ப கீதம் இசைக்க வேண்டிய நான்—துன்ப கீதம் பாடவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுவிட்டது! உல்லாச உப்பரிகையில், சல்லாப சதுரங்கத்தில், ஆடிப் பாடி ஓட வேண்டிய நான், தென்னகத்தில், எங்கேயோ ஒரு மூலையில், சிறை கம்பிகளிடையே சிக்கித் தவிக்கிறேன்! "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை; எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"-புரட்சிக் கவிஞரின் பொன் மொழிகள் எனக்கு எப்படி ஆறுதல் அளிக்கும்? நான் என்ன தாயகத்து விடுதலைப் போரில் களம் புகுந்த காரிகையா? தமிழ் மாதாவின் மாசு துடைக்கும் நற்றமிழரின் போர்க் கருவியா? இல்லை—இல்லை: என் வாழ்வுக்கு வாழ்வளித்த உத்தமனை—என் அத்தானை—சாடித்த சண்டாளி! உலைக் கூடமாகி விட்டது என் உள்ளம்; அலை மோதிக் கொண்டேயிருக்கிறது. அனல் கக்கும் எரிமலை—சுழன்று சுழன்று வீசும்சூறாவளி-என்உள்ளம். அமைதிக்கு இடம் ஏது? அமைதி...அமைதி... என் சாவிலேதான் நான் அமைதியைக் காணமுடியும்... என் கண்ணீரை மரணதேவதையின் கரங்கள்தான் துடைக்க முடியும்... மரணம்... சாவு...அய்யோ...என்ன பயங்கரம்! நினைப்பதற்கே பயமாக இருக்கிறதே! பயந்து என்ன பயன்? வலையில் சிக்கிய மானை விடவா போகிறார்கள்? தூண்டிலில் மாட்டிய மீன் துள்ளித் துள்ளி சாகவேண்டியதுதான் ... சாகவேண்டியதுதான்...செத்தே போகிறேன்—

'சரக்...சரக்' என வார்டர்களின் கனத்த பூட்சுகளின் சப்தத்தைக் கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டது எனக்கு. அதோ லொட்—லொட் என்று தட்டிக்கொண்டு போகிறாரே, அவர்தான் 'கெடிகாரம்' சிறை மொழிப்படி..., கூண்டிலே அடைக்கப்பட்ட பறவைகள் பத்திரமாக இருக்கிறதா என்பதை கணக்கிடும் அதிகாரி...அந்த முகங்களையெல்லாம் கண்டு கண்டு சலித்துவிட்

றுகதை...

...ஸ சக்தி..

...து... இன்னும் சில நாட்கள்...
பின் யாரும் பார்க்க முடியாத
இடத்திற்குப் போய்விடுவேன்...

வானத்திலே விண்மீன்கள் ஒளி
சிந்துகிறது; என் மனதிலே இருள்! வட்ட நிலா 'இட்ட அடிநோக— எடுத்தடி கொப்பளிக்க' பவனி வருகிறது; என் வாழ்வின் நிலா?... காலத்தின் கொடுமையில் மறைந்தே விட்டது. தென்னகத்துக்கே உரிமையான தென்றல் இன்பத்தை வீசுகிறது...என் உள்ளத்தில் புயல்...! மலர்கள் இதழ் விரித்து சிரிக்கிறது; என்வாழ்க்கை மலர் அரும்பிலேயே கருகிவிட்டதே...கருகிய மொட்டு...குப்பையிலே எறிய வேண்டியதுதானே...

"உனக்கும், எனக்கும் உறவு காட்டி சொன்னதெல்லாம் கதையா?"—எங்கிருந்தோ கீதம் காற்றினில் மிதந்து வந்தது...ஆமாம்; எனக்கும் அவருக்கும்-என் ஆசை அத்தானுக்கும், இருந்த உறவு—சொந்தம்—பந்தம் — எல்லாம் கதையாகத்தான் முடிந்துவிட்டது ...தொட்டுத் தாலிகட்டிய கணவனை சுட்டுக் கொன்றேன்! மஞ்சள் நீரில் குளித்து—வாச மலர் அணிந்து—பஞ்சணையில் கொஞ்சிக் குலாவிய இதய தேவனை, நெஞ்சத்தில் கொஞ்சமும் இரக்கமின்றி கொலை செய்தேன்...புலிக்கு வைத்த குறி புள்ளி மான்மேல் பட்டுவிட்டது! என் வாழ்வை சூறையாட வந்த வல்லூறுக்கு குறி வைத்தேன். ஆனால் எதிர்பாராமல் என் வாழ்வையே சூறையாடி விட்டது...காதல் மொழி பேசி, கனி உதடுகளால் முத்த மழைபொழிந்து, 'கண்ணே! மணியே! பொன்னே! தேனே!' என்றெல்லாம் அழைத்த என் அத்தானை சாவூருக்கு அனுப்பி விட்டேன்...

'அத்தான் செத்ததிற்கு செத்தாள் இத்தென்னாட்டு அன்னம்' என்ற காதல் காவியத்தைப் படித்தவள்தான் நான். ஆம்! இன்னும் சில நாட்களில் நான் சாகத்தான் போகிறேன்...மரணத்தின் மடியிலேதான் நான் இன்பம் காண முடியும். 'இனிக்க, இனிக்க பேசியதெல்லாம் வெறும் கனவா?' — கீதம் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

ஆம்! "களிப்பில் ஆடும் கான மயிலே! காதாரப் பண்பாடும் குயிலே!" என்று கவிதை மொழியில் இனிமேல் யார் என்னை அழைக்கப் போகிறார்கள்? எல்லாம் கனவாகி விட்டது...என் வாழ்வே கனவாகி விட்டது...

அறையின் கதவு திறக்கும் ஓசை கேட்டு கண் விழித்தேன். உணவு வந்தது. உணவா அது! உணவு என்ற பெயரால் தரப்படும் கடுந்தண்டனை. "எனக்கு வேண்டாம்...என்னால் சாப்பிட இயலாது." என்றேன்.

"சிறிது சாப்பிடம்மா...சாப்பிடாமலிருப்பதுகுற்றம்-" துக்கம் தொனித்தது அந்தக் குரலில்... சிறையில் சாப்பிட மறுப்பது குற்றமாம்! இந்தப் பரந்த வையகத்தில் பசி, பசி என்று பரிதவிக்கின்றனர் பல்லாயிரவர்: புசி—புசி என்று ஒரு கவளம் கொடுக்க யாரும் முன் வருவதில்லை. என்ன விசித்திரம்; வேடிக்கை! காளிகோயிலுக்குப் பலியிடும் ஆட்டுக்கிடாவை கொழுக்கவைப்பது போல, என்னையும் கொழுக்க வைக்கிறார்கள், தூக்குக் கயிற்றில் தொங்க வைக்க.

"உன்னைப் பார்க்க உன் தாயும், தம்பியும் வந்திருக்கிறார்கள்" இன்றுதான் நான் என்னைப் பெற்றெடுத்த தாயை—மருமகனோடு மஞ்சத்தில் மருவி, மழலை மொழி பேசும் குழவியைப் பெற்றெடுத்து சீராட்டித் தாலாட்டும் காட்சியைக்காணவேண்டியதாயை-இறுதியாக சிறை கம்பிகளை எண்ணிக் கொண்டு காணப் போகிறேன். தன் பேத்தியின் கொச்சை மொழியை இச்சையுடன் கேட்டு மகிழ வேண்டிய என் அன்னை-மகளின் கண்ணீர் வடிக்கும் முகத்தைப் பார்க்க வந்திருக்கிறார்கள். 'ஆசை தம்பி-பாரடா பாப்பாவை! அத்தானைக் கண்டதும் அவளின் கன்னங்கள் சிவந்து விட்டன' என்று கூற வேண்டிய நான்...எட்டி நிற்கும் என் தம்பியை தொட்டுக்கூட பேச முடியாது;அய்யோ! இன்றே எனக்கு தண்டனையை பூர்த்தி செய்துவிடக்கூடாதா? ஏன் இப்படிக்காலதாமதம் செய்கிறார்கள்? நாள் நீடிக்க நீடிக்க வேதனையும் வளருகிறதே! அணு, அணுவாக சாகடிக்கிறார்களே...

அம்மாவும், தம்பியும் கண்களிலே கண்ணீரை கலங்கவிட்டு கம்பிகளின் ஊடே என்னைப் பார்த்தனர். அவர்கள் இருவரையும் அப்படியே கட்டிப் பிடித்து கதற துடித்தது என் இதயம். அம்மாவின் மடியிலே என் முகத்தைப் புதைத்து, தேம்பித் தேம்பி அழத் துடித்த என்னை கனமான இரும்புக் கம்பிகள் பிரித்தன ...அய்யோ தம்பி! என் தங்கமே! உன் கண்களில் வழியும் நீரைக் கூட துடைக்க முடியாதே!... அம்மா! அழாதே...என் வாழ்வு முடிந்து விட்டது......அழுது கொண்டே பிறந்தேன்......அழுது கொண்டே வாழ்ந்தேன்....அழுது கொண்டே சாகிறேன். சுசிலா என்றொருபெண் உனக்குப் பிறக்கவே இல்லை என்று நினைத்துக் கொள்..என்னை மறந்துவிடு. தம்பியை கவனித்துக் கொள்...பெண்ணாகப் பிறந்து உனக்கு கண்ணீரை பரிசாகத் தந்தேன்...தம்பி-ஆண் மகன்; உன் கண்ணீரைத் துடைப்பான்...என்னைக் கண்டு கண்ணீரை வடிப்பதைவிட அவனை கவனித்தாலாவது உனக்கு உதவுவான். அணையப் போகும் விளக்கிடத்தில் உனக்கு ஆசை ஏன்? பட்டுப்போனமரம்எதற்குப்பயன் படும்? தளிர் துளிர்க்க தண்ணீர் பாய்ச்சு...அம்மா...

"கவர்னருக்கு கருணை மனு அனுப்பி யிருக்கிறார்கள்"—விக்கலுக் கிடையே வெளிவந்தது...

கருணையா? எனக்கா? நான் யாருக்காக வாழப் போகிறேன்? என் வாழ்வின் ஒளியை நானே அணைத்துவிட்டேன்...இனி எதற்காக நான் வாழ வேண்டும்...?

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

சுரைக்காய்ப் பிஞ்சின் தலையில் மிளகாய்ப்
பழத்தைச் செருகி இடையில் மல்லிகை
இலைகள் சிறகாய்ப் பின்புறம் தாழை
மடலை வைத்தால்; பச்சைக் கிளியே!
உன்போல் படைப்பு! உன்போல் படைப்பு!
வட்டத் தலையே! சிவப்பு மூக்கே!
சின்ன இறகே! நீண்ட வாலே!
கன்னற் கிளியே, சொன்னது பிசகா?
வர்ணனை கேட்டு வாழ்த்த மறுப்பாய்.
புகழ்ச்சொல் கேட்டும் போற்றிட மாட்டாய்.
காரணம் அறிவேன் சின்னக் கிளியே!
கூண்டில் உன்னைப் போட்டதனாலே
தூண்டிற் புழுவாய்த் துடிக்கிறாய் நீயும்.
சிறையில் உன்னை அடைத்து மகிழ்ந்தேன்;
இன்று தெரிந்தேன்;
சிறை மிகக் கொடிது! சிறை மிகக் கொடிது!

* * *

மன்னித் திடுவாய்; மன்னித் திடுவாய்!
பொன்மொழிப் பாவாய் மன்னித் திடுவாய்!
என்சிறை முடிந்ததும் உன்சிறை உடைப்பேன்.
சிறையின் கஷ்டம் சிறையால் உணர்ந்தேன்.
அடிமைப் புள்ளே! அழகுக் கிள்ளாய்!
அனுபவம் பெற்றேன் - அனுபவம் பெற்றேன்.
வந்ததும் தருவேன் விடுதலை வாழ்வு.
பறப்பாய், பறப்பாய், உயரப் பறப்பாய்!
கட்டிய கால்கள் விடுபடும் உடனே
எட்டிய மட்டும் ஏறிப் பறப்பாய்!
எழில்சிறப் பெண்ணே எங்கும் பறப்பாய்!
கூண்டினில் உன்னை அடைத்தேன் கிளியே!
மன்னித்து விடுக! கூண்டின் கஷ்டம்
புரிந்து கொண்டேன். கூண்டின் கஷ்டம்
புரிந்து கொண்டதால் கூண்டுக் கிளியினைத்
திறந்து விடுவேன். ஆனால் கிளியே,
கூண்டின் கஷ்டம் புரிந்தோர் இங்கு
ஆண்டிட வந்தார்
மாண்டிட எம்மைக் கூண்டினில் போட்டார்;
ஏனோ கிளியே? ஏனோ கிளியே?
பதிலும் சொல்வாய் பச்சைக் கிளியே!
உன்னைநான் அடைத்ததால் என்னை அடைத்தார்
என்றே சொல்வாய். நன்று கிளியே;
யாரை அடைத்ததால் நானுன்னை அடைத்தேனோ?

Filmed as bound

புயலில் புதுவைக் கவிஞர்

கருத்தைக் கேடயமாக்கி, சொற் கோர்வைகளைக் கூர்வாட்களாக்கி சமுதாயத்துடன் போர் தொடுத்த நமது கவிஞர் பெருமகனார், ஒரு முறை இயற்கையுடனும் போராடியிருக்கிறார்.

'சோ' வென்று கொட்டும் பெரு மழை—சுழன்றடிக்கும் சூருவளிக் காற்று—பூகம்பத்தை நினைவுறுத்தும் இந்தப் பயங்கரச் சூழ்நிலையில், புதுவையை அடுத்த ஆலங்குப்பம் பள்ளி ஒன்றில் சிக்கிக் கொண்டார் கவிஞர். அவருடன் அவருடைய உயிரனைய நண்பர்கள் இருவர் வேறு இருந்தனர்.

இயற்கையின் வலிமைக்கு முன் அந்தக் கற்கட்டிடம் எம்மாத்திரம்? கடகடத்துவிட்ட பள்ளியிலிருந்து வெளியே ஓடிவந்தனர் அம்மூவரும். நண்பர்கள் இருவரும் இயற்கையின் கோர நர்த்தனத்தில் சோர்ந்தே விட்டனர். பாதி உயிரிழந்த அவர்களை தனது இரு கரங்களாலும் அணைத்துக் கொண்டார், கவிஞர். ஆனால் காற்றோ அவர்களைத் தூக்கிக் கொண்டு சென்றது. அவர்கள் பறந்தார்கள், வகையறியாது — போகும் வழிதெரியாது!

'வெட்'டென்று தோன்றி மறைந்த மின்னலில், எதிரேயிருந்த பெருமாள்கோவில் தூண்கள் அவரது கண்களில் தென்பட்டு விட்டன. உடன் மூச்சுத்திணறி பேச்சற்றிருக்கும் நண்பர்களை ஒருவருக்கொருவர் ஆதரவாக பொருத்தி வைத்துவிட்டு, தூண்களைக்கண்ட திசையை நோக்கி ஓடினார். இல்லை; ஓடவில்லை; காற்றை விமானமாக்கிப் பறந்தார். அந்தப் பாதையில் அவர் சற்றும் எதிர்பாராத வண்ணம் ஒரு வயற் கிணறு வேறு வரவேற்றது. அந்த ஆழ் கிணற்றிலே வீழ்ந்து, மூழ்கித் தவித்த அவருக்கு 'அபயம்' தந்தது கரையோரச் செடி ஒன்று. அதன் துணை கொண்டு தப்பினார். முடிவில் கோவிலையும் அடைந்து விட்டார்.

உடன் நண்பர்களின் நினைவு வந்தது. மீண்டும் வந்த திசையிலேயே பாய்ந்து ஓடினார். சாய்ந்து கிடந்த மரங்கள் காலைத் தடுக்க—முற் செடிகள் உடலைத் தழுவி வேதனை கொடுக்க—காரிருளில் அந்த ஈருடல்களையும் காப்பாற்றியே விட்டார், கவிஞர்!

''தனக்கென வாழான் தமிழன்'' என்பதைத் தரணிக்குணர்த்தும் இந்தச் சம்பவத்தை அறிந்த பாரதியார், புதுவைக் கவிஞரின் இந்தப் புதுமை அனுபவத்தை அரவிந்தரிடம் சொன்னாராம். அது கேட்ட அரவிந்தர் நம்மவருக்குத் தரும் பாராட்டுரைகளைக் கேளுங்கள் :—

''மனிதனுடைய சொந்த நினைவையும், செயலையும் வாயில் போட்டுக்கொண்ட கோரமான காற்றும் மழையும் கடும் போர் புரியும் உக்கிரத்திலும், கோயிலை நீ தெரிந்து கொண்டு சென்ற பின், உன் அன்பர்களைக் காப்பாற்ற மீண்டும் திரும்பி வந்தாய்; காப்பாற்றினாய். இந்த எண்ணமும் செயலும் அருமையானவை. இன்றைய நாட்டு வாலிபர்களுக்கு இந்தப் பிறர் நலம் நாடும் பெருங்குணம் வேண்டற்பாலது.''

கனவல்ல!......

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

''நேரம் ஆகிவிட்டது''-ஜெயிலர் கர்ஜித்தார். நான்என் கூண்டிற்குத் திரும்பினேன். அந்த அறையிலிருந்த காலண்டர் என் கண்களில் பட்டது. எப்ரல் பத்து! நான் பிறந்த நாள். இருபத்தைந்தாண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. இருபத்தாருவது வயதில் என்வாழ்வும் முடியப் போகிறது. என் வாழ்வின் இருபத்தாருவது மைல் கல் என் கல்லறையாகி விட்டது!

சென்ற ஆண்டு பிறந்த தினத்தன்று நானும் அவரும் சினிமாவுக்குச் சென்றிருந்தோம். படத்தைப் பார்க்காமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். ''அத்தான்! அதோ அழகு ராணிகள்; அங்கே ஆடுகிறார்கள்'' என்றேன்.

''சுசி! என் இதய ராணி! உதய நிலவே! அவர்களைப் பார்ப்பதைவிட உன்னைப் பார்ப்பதில்தான் என்உள்ளம் மகிழ்கிறது. திரையில் தான் அந்த நட்சத்திரங்கள்மின்ன முடியும். என்றும் என் வைர முழு நிலவே!..உன்னைவிடவா அவர்கள் உயர்ந்தவர்கள்? காகிதப் பூக்கள் அவர்கள். வண்ணம் இருக்கும்... மணம் இருக்காது; ஆனால் நீ என்றும் மணம் வீசும் மகிழ மலரல்லவா...?

'இச்'...

''சும்மா இருங்கள். இது நமது படுக்கை அறை அல்ல; படக் காட்சிசாலை...''

இந்த ஓராண்டு காலத்திற்குள் எவ்வளவு மாறுதல்...என்னைச் சுற்றி சுற்றி வந்துக்கொண்டிருந்த அவர் லில்லியை சுற்ற ஆரம்பித்து விட்டார்...முத்த மழையால் என்னைத் திணர அடித்தவர் என்னைக் கண்டாலே கத்த ஆரம்பித்து விட்டார்...நித்தம், நித்தம் லில்லியின் சாகசத்திலே சொக்கி விழுந்து 'உத்தமி-உன் போல் உண்டோ அன்பு சொரிய' என்று கூறியவர்...'உன் மத்தம் பிடித்தவளே; என் வழியிலே குறுக்கிடாதே' என்று கூறுமளவுக்கு வந்து விட்டார். என்ன மாதல்...! ஆண் இனம் வண்டினம் என்பது எவ்வளவு உண்மை! மலருக்கு மலர் தாவும் வண்டு; மரத்திற்கு மரம் தாவும் மந்தி... ஆண் இனத்தின் சொந்தக்காரர்கள்; இரக்கம் இல்லா அரக்கர்கள்; இதயம் இல்லா உதவாக்கரைகள்...

எனக்கு மட்டும் இரக்கம்... இருந்ததா?...இதயம் இரும்பாகி விட்டது எனக்கு...இல்லா விட்டால் நான் கொலைகாரியாக மாறியிருப்பேனா? எனக்கு என்ன வயதாகி விட்டதா—வாழ்க்கையில் சலிப்பேற்பட? வாலைக் குமரி நான்—பருவத்தின் பூரிப்பு இன்னும் என் உடலில் ஓடிக்கொண்டுதானிருக்கிறது......ஒரு குழந்தைக்குக்கூட தாயாகாத கட்டிளங் குமரி நான்...என்னை விட்டு ஏன் அவளின் வலையில் விழ வேண்டும்? அழகி என்று பேர் எடுத்தவள் நான் ஏன்...'அழகுச் சிலையே! சொகுசு முல்லையே!' என்று பல முறை என்னை அவர் அழைத்திருக்கிறாரே! என்னிடத்திலில்லாத என்னத்தைக் கண்டார் அவளிடம்?

ஐந்தாண்டுகளுக்கு முன்தான் எனக்குத் திருமணமாயிற்று. பலபேர்அறிய கைப்பிடித்த கணவன் என் கையாலேயே மரணமடைவாரென்று நான் எதிர்பார்க்கவில்லை. மணமாலை சூட்டிய என் கரங்களே அவரை பிணமாக்கிவிட்டது. இந்த ஐந்தாண்டில் எனக்கு ஒரு குழந்தை பிறந்திருந்தால் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்திருக்காதென்றே நினைக்கிறேன். ஒரு சேயிக்கு நான் தாயாகியிருந்தால் 'அவர்' மேல் நான் வைத்திருந்த பாசத்தை அது பங்கு போட்டுக் கொண்டிருக்கும். நான் அவர் மேல் கொண்ட காதல்......அவருக்கு 'சாதலா'க முடிந்து விட்டதே. நானும் அவர் மேல் என் பாசத்தை எல்லாம் அள்ளிச் சொரியாமல், என் குழவியுடன் காலத்தை ஓட்டியிருப்பேன்...

அய்யோ! அத்தான்! நீங்கள் ஏன் அப்படிச் செய்தீர்கள்? அன்பு மனைவி என்னைவிட்டு அந்த சரசியின் வலையிலே எப்படி விழுந்தீர்கள்? என் வாழ்வை பாழாக்கிய அந்த பழிகாரியை ஒழிக்க குறி வைத்தேன். நீங்கள் ஏன் உங்கள் உயிரை-இல்லை இல்லை-என் உயிரை பணயமாக வைத்து அவளைக் காப்பாற்றினீர்கள்...

நாட்கள் ஏன் சீக்கிரமாக ஓடுவதில்லை? என் அறையின் சுவற்றிலுள்ள கிறல்களின் எண்ணிக்கை எல்லாம் எனக்குத் தெரியும். மூட்டைப் பூச்சிகளின் 'மாளிகைகளை' எல்லாம் கண்மூடிக்கொண்டே காட்டுவேன். கொசுக்களின் சங்கீதத்தைக் கேட்டுக் கேட்டு என் காதுகளே செவிடாகிவிட்டது. ஒரு குறிப்பிட்ட திசையிலுள்ள, ஒரு வரம்புக்குள்பட்ட, வானத்தைக் கண்டு கண்டு, என் கண்கள் பூத்துவிட்டன. நாள், கிழமை இவைகளை மறந்தே போய்விட்டேன். சில நேரங்களில் பகலா இரவா என்பதைக்கூடஅறிய முடிவதில்லை. மணி அடிக்கும்...சோறு வரும்...காவற்காரர்களின் பாரா.. இவைகள்தான் இங்கு என் வாழ்வு...

பயங்கரமான ஒரு கனவு கண்டு கண் விழித்தேன்...அத்தான் என்னைக்காண வந்திருந்தார். அவரின் கூரிய விழிகள் என் இதயத்தைத் தைத்தது... அவரைக் காண என் கண்கள் கூசின... அச்சத்தைப் போக்கி—ஆவலோடு அந்த ஆசை முகத்தைப் பார்க்க விழிகளைத் திறந்தேன். அங்கே அவரின் முகம் இல்லை. மண்டையோடு தான் என் கண்களுக்குத் தெரிந்தது. 'அய்யோ: அத்தான்' என்றலறி கண் விழித்தேன். கனவா அது: இல்லை—உண்மைதான். அத்தானின் சத்தான உடலை பூச்சியும், புழுவும் தின்றுவிட்டு எலும்புக் கூடுதான் மிச்சமாக இருக்கும்...

நான் முதலில் கமலா சொன்னதை நம்பவேயில்லை. அத்தானும் லில்லியும் சினிமா கொட்டகையில் சேர்ந்து உட்கார்ந்திருந்தார்களாம். அவரைக் கேட்டேன், 'சினிமாபார்க்கபோயிருந்தீர்களா?' என்று. 'இல்லை' என்றார். சட்டையைத் துழாவினேன். இரண்டு டிக்கட்டுகள் இருந்தன. என் சந்தேகம் வலுத்தது. இரவில் வீட்டில் தங்குவதும் அரிதாகியது. 'எங்கே போகிறீர்கள்? இரவில் கூடவா உத்தியோகம்?' என்பேன்!

'சப் இன்ஸ்பெக்டருக்கு இரவு பகலென்று உண்டா, சுசி?' என்பார்...

பல-பல செய்திகள் என் காதுகளிலே விழுந்து கொண்டே இருந்தன. நாட்கள் ஓட, ஓட அவரும் லில்லியின் வீடே தஞ்சம் என புக ஆரம்பித்தார். கெஞ்சினேன்; காலில் விழுந்து கதறினேன்...என் கண்ணீரால் அவரின் காலைக் கழுவினேன்......அவரின் நெஞ்சம் இளகவில்லை...தஞ்சம் எனப் புகுந்த என்னை வஞ்சித்து விட்டு, அந்த வஞ்சகியின் மஞ்சமே கதியென கிடந்தார். நான் இன்றுபோல் அன்றும் அழுது அழுது, அணு அணுவாக செத்துக் கொண்டிருந்தேன். புயலில் சிக்கிய படகு போலாயிற்று என் வாழ்வு...கணவனின் அன்பை இழந்த ஒருவளுக்கு வாழ்க்கையில் நிம்மதி ஏது? கண்களிலே கண்ணீரை கலக்கவிட்டு கவலையை மறக்க முயன்றேன். முடியவில்லை; முடிவில்லா துயரம் என்னை பற்றிக் கொண்டது. இன்பம் எட்டா இடத்திற்கு ஓடிவிட்டது. என் வாழ்வின் நிலவை இனி நான் தொடவே முடியாது...கட்டிய கணவனால் ஊதாசினம் செய்யப்பட்ட நான் என் அன்னையின் அரவணைப்பில் அமைதி காண புறப்பட்டேன். அங்கேயும் அவரின் நினைவு என்னை வாட்டியது. நான் அங்கு இல்லாவிட்டால் அவரின் தவறுதல இன்னும் அதிகமாகுமே என எண்ணி திரும்பினேன்.

இரவு பத்து மணிக்கு ரயிலை விட்டு இறங்கி வீட்டை அடைந்தேன். காவற்காரன் கதவைத் திறந்தான்...வழக்கம் போல என் படுக்கையறை நோக்கிப் போனேன்...வராண்டாவில் அவரின் பெல்ட்டும், கைத் துப்பாக்கியும் மேஜை மேல் கிடந்தன. ''என்ன, இன்று வீட்டிலிருக்கிறாரே, அதிசயம்தான்; லில்லியின் அன்பும் சசந்து விட்டதோ''என்றெண்ணினேன். ஆனால்; ''லில்லி! என் அல்லி! கலாவல்லி! இனிமேல் நீதான் என் இதயவல்லி'' என்று என் கணவர் கூறுவது என் காதில் ஒலித்தது.

''அத்தான்...உங்கள் மனைவி வந்தால்...''—இது அவளின் குரல்தான்...

''வரமாட்டாள்...வந்தால்தான் என்ன...உன் வேலைக்காரியாக இருப்பாள்...''

என் நெஞ்சு பதறியது...ஆத்திரத்தால் என் அங்கமெல்லாம் நடுங்கின. என் வாழ்வை பாழாக்கியவளை பழிவாங்கத் துடித்தது என் உள்ளம்.

அவளை—லில்லியை-என்வாழ்வில் புகுந்த விஷ நாகத்தை ஒழித்து விட தீர்மானித்தேன். கணவரின் கைத் துப்பாக்கியை எடுத்துச்

★ தொடர்ச்சி 15-ம் பக்கம்

கொலை வாளினை எடடா!

க. அன்பழகன், M.A.

எங்கும் எதற்கும் எவரும் புரட்சி செய்யுங் காலம் இது. புரட்சி நடவாத காலமோ, தோன்ருத நாடோ இல்லை. புரட்சி முதலில் எண்ணத்தில் தோன்றி, அதன் பின்னரே செயலில் நிகழும் வேறு எந்த நிகழ்ச்சியையும் போல. அப்புரட்சி, உள்ளத்திலே மலர்ந்து, ஏடுகளிலே கமழ்ந்து, மக்களுடைய மனத்திலே நிறைந்து, அவர் தம் செயலிலே காய்த்து, இறுதியிலே நாட்டிலே—அந்நாட்டு மக்கள் வாழ்க்கையிலே கனிகின்றது.

எண்ணத்தில் ஏற்படும் மலர்ச்சி, ஏட்டிலே இடம் பெற்றபின் தான் நாட்டிலே புரட்சிக்கான அடிப்படைகள் வலுப் பெறுகின்றன. உலகின் வரலாற்றிலே ஏட்டிலே புரட்சியைத் தோற்றுவித்தோர் சிலர்; நாட்டிலே அதனை உண்மையாக்கினேரும் சிலர். இந்தியத் துணைக் கண்டத்திலோ, அன்றித் திராவிடத் திருநாட்டிலோ என்ருல், எண்ணவும் ஆள் கிடைத்திடுதல் அருமையாம். திராவிடத்தில் புரட்சிக் கருத்தை அழகான கவிதைகளாக, காவியச் சித்திரங்களாக எட்டிலே திகழ வைத்தவர், தனிப் பெருங் கவிஞர் பெருந்தகை பாரதிதாசன் ஆவார். கவிஞர், கருத்துலகை மலரச்செய்யுந் தலையாய கடனை, முதற் பணியை, முட்டின்றி நிறைவேற்றியுள்ளார். முதற் கண் நிகழ்வது நிகழ்ந்தால் அதன் வழிப் புத்துலகம் பூக்க வேண்டுமன்ருே!

இந்நாட்டிலே புரட்சியுள்ளம் ஒடுங்கி, புதுமைக் கருத்துக்கள் மங்கி, பகுத்தறியும் பண்பு நசித்துப் பலப்பல நூற்ருண்டுகள் கழிந்துவிட்டன. மக்களெல்லாம் நடைப்பிணங்களாக உலவுகின்றனர்; மானமிழந்து மதி கெட்டுத் திரிகின்றனர்; தன்னுணர்வற்று, தம் தாய்நாட்டை மறந்து, உரிமையிழந்து நிற்கின்றனர்; மறம் குன்றியதால், ''வீரம்'' வரலாற்றுச் செய்தியாகவும், 'போர்க்களம்' படக் காட்சியாகவும், 'வெற்றி' வேற்று நாட்டார் உரிமையாகவும் மாறிவிட்டன. பூரிக்குந் தோள்களோ, போர்ச் செய்தி கேட்டுக் களிப்பூறும் உள்ளமோ, வாளினது பளபளப்பைக் கண்டு ஒளிபெறும் கண்களோ, தோளொடு தோளிணைத்து நிற்கும் படை மாட்சியை எண்ணியும், தனியாற்றலைக் கருதியும் ''பகைப்புலன் மாய்த்திடுவோம்'' என்ற எக்காளமோ, இன்று காணுத—கேளாத காட்சிகளாகி விட்டன. தமிழகத்தின் பண்டைப் பெருமைகள் — அந்நாள் திராவிட மக்கள் பெற்ற வெற்றிகளின் அடிப்படைகள்—இன்று சிதறிவிட்டன. சீரிழந்த—சிறப்பிழந்த திராவிடமே இன்றைய தமிழகம். இந்நாடு மறுமலர்ச்சியடைய வேண்டுமானுல் புரட்சி பூக்கத்தான் வேண்டும்.

புரட்சியின்றேல் புத்துலக வாழ்வில்லை. அந்தப் புது வாழ்வு இல்லையேல் பழைய சாக்காடே தான். பலப்பல நூற்ருண்டுகளாக நமது நாட்டைப் பாழ்படுத்தி, நமது உடலை அரித்து, உள்ளத்தைத் தீய்த்து, உயிரை மாய்த்து வருகின்ற அதே சாக்காடுதான். ''நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்—இது நமக்கே பரம்பரைச் சுடுகாடு என்பதுணர்ந்தோம்'' என்று பாடி ஏங்கவேண்டிய அளவிற்கு இன்றைய திராவிடநாடு—ஆரியத்தின் மாயக்காடாக, வடநாட்டாரின் வாணிப வேட்டைக் காடாக, ஆங்கிலேயரின் ஆதிபத்திய கொள்ளைக் காடாக, தமிழரின் வாழ்விற்கு 'முடிவிலோர் பிடிசாம்பல்' என்ற தத்துவத்தைப் போதிக்கும் 'சுடுகாடா'க ஆகிவிட்டது.

திராவிட மக்கள் எழுச்சியுற வேண்டுமானுல், அதற்குப் புரட்சியுள்ளம் வேண்டும். மக்கள் மனமெல்லாம், புரட்சி விருப்பாலே பெருநெருப்பாதல் வேண்டும். அதற்கெனவே, கவிஞர் பாடத் தொடங்கினுர். ஏட்டினை எடுத்தார். எழுத்தோவியங்களை, உணர்வுச் சித்திரங்களை, புத்துலகக் காட்சிகளை, பகுத்திவுப் பாக்களை, புரட்சிப் புயல்களைத் தீட்டினுர். நாட்டு மக்களிடத்திலே நீட்டினுர். புரட்சிக் கவிஞரின் கவிதைத் தீ நாட்டு மக்கள் உள்ளமெல்லாம் சென்று பற்றத் தொடங்கியது.

''சாந்தியால் உலகம்
தழைப்பது நன்ருே?
சமயபேதம் வளர்த்தே
தளர்வது நன்ருே?''

என்று கேட்பது கவிஞர்தானே? என்ருல், ஆம். சாந்தியால் உலகம் தழைப்பது நன்று. எனவே அச் சாந்திக்கு மாருன வேறுபாடுகளை விளைக்கும் சமயங்களும் சச்சரவுகளும் ஒழிக்கப்படவேண்டும். அதை ஒழிக்கப் புரட்சி தேவை. அப்புரட்சி, போர்க்களம் புகுந்தேனும் நடந்தே தீர வேண்டும் என்பது கவிஞர் கருத்து.

அணிபெறத் தமிழர் கூட்டம்
போர்த்தொழில் பயில்வதெண்ணிப்
புவியெலாம் நடுங்கிற்றென்ற
வார்த்தையைக் கேட்டுநெஞ்சு
மகிழ்ந்துகூத்தாடல் என்ருே?
மண்ணிடை வாளையேந்திப்
பகைப்புலம் மாய்ப்பதற்கும்
எண்ணிலாத் தமிழர் உள்ளார்
எனும்நிலை காண்பதென்ருே?

என்று கவிஞர், தம் நாட்டார் போர்த்தொழில் பயின்ற வீரர்களாக விளங்க வேண்டுமென விழைந்து கூறுகின்ருர். அந்நிலை ஏற்பட்டுவிட்டால்,

''எங்கள் வாழ்வும்
எங்கள் வளமும்
மங்காத தமிழென்று
சங்கே முழங்கு!''

என முழங்கி,

''வெங்கொடுமைச் சாக்காட்டில்
விளையாடுந்
தோளெங்கள் வெற்றித்
தோள்கள்''

என்று தோள் தட்டி,

''சிங்களஞ்சேர்
தென்னுட்டு மக்கள்
தீராதிதீரரென்
றூதூது சங்கே!
பொங்கு தமிழர்க்
கின்னல் விளைத்தால்
சங்காரம்
நிசமெனச்
சங்கே முழங்கு!''

எனச் சங்கநாதம் முழங்கிடுவர் தமிழர் எனக் கருதுகிருர் கவிஞர்.

அம்முழக்கத்தின் பின்,

''இளம் பிற
றுக்காண்
தமிழர் சிங்கக் கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண்
பகைக்கூட்டத்தை
வளம்பெரியத் தமிழ்
நாட்டில் தமிழரல்லார்
வால்நீட்டினுல் உதைதான்
கிடைத்திடுங் காண்''

என்று தமிழருடைய எழுச்சி இருக்கும் விதத்தை இங்கே சித்திரிக்கின்ருர். தகுமுறை நீங்கி நடக்கும் மாற்ருருக்குத் தமிழர் கற்பிக்க வேண்டியதை எடுத்துக் கூறியுள்ளார்.

அந்தப் ''புரட்சி உள்ளம்'' தொழிலாளரைப் பற்றிப் பேசும் போது, இதைவிடப் பன்மடங்காகக் கனல் கக்குகின்றதைக் காணலாம்!

''நடவுசெய்த தோழர்கூலி
நாலணுவை ஏற்பதும்
உடலுழைப்பி லாதசெல்வர்
உலகைஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை ஏவுவோம்.''

இங்கே, தொழிலாளரை அவர்களது மூட நம்பிக்கையைக் கொண்டே ஏமாற்றிப் பயன்படும் கற்பனைக் கட்டினை அறுத்து அவர்களுடைய போராட்டத்தைத் துவக்குவோம் எனக் கூறுகிருர். இன்னும்,

''செப்புதல் கேட்பீர்!—இந்தச்
செகத் தொழிலாளர்கள்
மிகப்பலர் ஆதலின்,
சுப்பல்களாக—இனித்
தொழும்பர்களாக
மதித்திடவேண்டாம்!
இப்பொழுதே நீர்—பொது
இன்பம் விளைத்திட
உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே—எங்கள்
உடலில் இரத்தம்
கொதிப்பேறு முன்பே''

என்று முதலாளிகளுக்குத் தொழிலாளிகளின் சார்பாக ஓர் எச்சரிக்கை திட்டியிருக்கிருர். இவ்வெச்சரிக்கையிலே ''இரத்தம் கொதிப்பேறுகிறது'' என்ற உண்மையை உணர்த்தியிருக்கிருர். அதன் விளைவாக ஏற்படும் போராட்டத்தில் தொழிலாளருக்கு இருக்கும் வலிவினை,

''எலிகள் புசிக்க எலாம்
கொடுத்தே சிங்க
எறுகள் ஏங்கிடுமோ—இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே
பெரும்

★ தொடர்ச்சி 14-ம் பக்கம்

பால் காய்ச்சிய படலம்!

பாரதியார் குடும்பம் ஊரில் இல்லை. அவருக்குத் துணை கவிஞர்தான். இரவு உணவுக்குப் பின் படுக்கும் பொழுது பாரதியார் பால் குடிப்பது வழக்கம். நம் கவிஞர் தூங்கிவிட்டார். பாரதியார் பால் காய்ச்சுகிருர். முயற்சி கைகூட வில்லை. கவிஞரை பாரதியார் எழுப்பினுர். ''பால் சுட வைக்கும் வித்தை உமக்கு வருமோ?'' என்று கேட்டார்.

''ஓ'' என்ருர் கவிஞர்.

மாடியிலிருந்து கீழிறங்கி வந்து அடுப்பின்மேல் இருந்த பாலில் கவிஞர் சூடேற்ற தொடங்கினுர். பாரதியார் அடுப்பிலிட்டுக் கொளுத்திய காகிதம் போக மீதி யிருந்ததை பாரதிதாசன் கொளுத்தினுர். வெகு நேரமாகியும் சூடேறவில்லை. இவரது முயற்சியும் அவ்வாறே முடிந்தது. பார்தியார் வந்தார். ''தங்களுக்கும் இழுப்போ?'' என்று கேட்டார் புன்னகையோடு. இருவரும் புனராலோசனை செய்தனர். மெதுவாகக் கண்டு பிடித்துவிட்டனர், காகிதக் கனல் பாலைச் சூடாக்கப் போதாது என்பதை. பிறகு சுள்ளி கொளுத்திப் பால் சூடேறப்பட்டது. —'கவிஞர் மலர்'

மக்கள் நிலை!......

6-ம் பக்கத் தொடர்ச்சி

'வண்ணங்களைப் போய்க்-கரு
மாமுகில் உண்டு-பின்பு
பண்ணும் முழக்கத்தை, மின்னலை,
அம்முகில்
பாய்ச்சிய வானவில்லை,
வண்ணக் கலாப—மயில்
பண்ணிய கூத்தை—அங்கு
வெண்முத்து மல்லிகை கண்டு
சிரித்தனள்!
மேல்முத்தை வான் சொரிந்தான்!'

மல்லிகை, வானக்காதலன் வழங்கிய முத்துக்களை மகிழ்ச்சியோடு அணிந்து கொண்டாள். அவள் மேனி சிலிர்த்தது. இந்த வனப்பை கவிஞரின் கண்கள் வாரி வாரி உண்டன. அவர் இதயத்தில் இன்பம் பாய்ந்தது. எப்படி ? ஊற்றுப் பாய்ச்சலாகவா ? இல்லை; ஆற்றுப் பாய்ச்சலாகவா ? அதுவும் இல்லை ; அப்படி யானல்... ? இன்பக் கடலே வந்து அவர் கருத்தினில் பாய்ந்ததாம் :

'விண் முத்தணிந்தாள்-அவள்
மேனி சிலிர்த்தாள்-இதைக்
கண்ணுண்ண உண்ணக் கருத்தினி
லின்பக்
கடல் வந்து பாய்ந்திடுதே!'

★

இயற்கை யழகிலே ஈடுபட்டுத் திளைத்த கவிஞர், உலக வாழ்க்கையை வெட்டி விட்டவர் அல்ல. தான் உணராததை ஊருக்கு உபதேசம் செய்யும் போலியுமல்ல. அல்லது காணுகின்ற காட்சியை அப்படியேசொற்சித்திரங்களாக்கி ரசிகர்களின் பட்டாளத்தை மட்டும் உற்பத்தி செய்யும் வெறும் அழகுக் கவி மட்டுமல்ல. " கலை கலைக்காகவே " என்று காரியக் கூச்சல் கிளப்பும் சந்தர்ப்பக் கவியுமல்ல. காலத்தின் போக்கை கவிதைக் கண்ணுடியிலே காட்டி, அதைக் காண்போரின் கருத்துக் கண்ணுடியிலே, ஒரு மறு மலர்ச்சியை—புதிய சமுதாயத்தைக் காண வேண்டும் என்ற எழுச்சியை — தூண்டிவிடும் புரட்சிக் கவி. இயற்கையில் ஐந்தறிவு உயிர்கள் அனுபவிக்கும் இன்பத்தை—சுதந்தரத்தை-வஞ்சகத்தையும் சூழ்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தில் வாழ்கின்ற மனித ஜாதியோடு ஒப்பிட்டுப் பார்க்கிருர். மனிதனின் அவல நிலை அவர் கண்களில் படுகிறது :

'மஞ்சம் திருத்தி-உடை
மாற்றி யணிந்தே-கொஞ்சம்
கொஞ்சிக் குலாவிட நாதன் வரும்படி
கோதை அழைக்கையிலே'

பகலெல்லாம் மாடுபோல உழைத்து ஓடாகி விட்ட இல்லத் தலைவி, இரவு குழந்தைகளுக்கு உணவு ஊட்டி—உணவு ஏதாவது இருந்தால்தான் — அவர்களைப் படுக்கையிலே கண்ணயரச்செய்து விட்டு, மஞ்சத்தைத் தட்டி, உடையை மாற்றி யணிந்து கொண்டு, கணவனேடு இப்பொழுதாவது சற்று மகிழ்ந்து பேசியிருக்கலாம் என்று எண்ணி, கணவனைக் குழைவோடு அழைக்கிருள் அந்தக் காரிகை.

ஆனல், கணவனுக்கோ காரியாலயத்தில்செக்குமாடாக உழைத்த சிரமம் இன்னும் தீரவில்லை. உழைப்புக்கேற்ற ஊதியம் இருந்தாலல்லவா, உடல் தளராமல் இருக்கும்? நோய் தீண்டாமல் இருக்கும்? அவனே சோகப் பதுமையாக, வருங்காலத்தைப் பற்றிப் பயங்கரமான எண்ணங்களோடு கவலைப்பட்டுக் கொண்டிருக்கிருன். சோகமும் அச்சமும் அளவுக்கு மிஞ்சிவிடுகின்றன. சிட்டுவின் சிருங்கார விளையாட்டோ, கூடல் இன்பம் தரப்போகும் அணிற் பிள்ளைகளின் ஊடலோ, மல்லிகையின் மந்தகாசச் சிரிப்போ அவன் வாழ்க்கையில் இல்லை. ஆசையோடு அழைக்க வேண்டியவன் அச்சுப் பதுமையாக உட்கார்ந்திருக்க, நாணத்தை நகையாகப் பூண வேண்டியவள், வெட்கத்தைவிட்டு அழைக்கிருள். விரக வேதனையாலா? அல்ல, அல்ல! நாளெல்லாம் துயரத்தையே தோழனுகக் கொண்ட கணவன், இந்த நேரத்திலாவது, சற்று இன்பங் காணட்டுமே என்ற இரக்க உணர்ச்சியால்!

தள்ளாமையும் தளர்வும் வயோதிகத்துக்கு சீக்கிரம் தள்ளிவிடும் என்பதோடு, மரணத்தின் வாயில் திடீரென்று தன்னைக்கொண்டு போய் நிறுத்திவிட்டால்...! பயங்கரமான கற்பனைதான். ஆனல் உண்மையாகி விட்டால்...!

—'என்
வஞ்சியும் பிள்ளையும் நானிறந்தால்
என்ன
வாதனை கொள்வாரோ'

தான் எதிர்பாராமல் திடீரென்று இறந்துவிட்டால், பிஞ்சுக் குழந்தையும் அந்தப் பேதைப் பெண்ணும் என்ன ஆவார்களோ என்ற எக்கம், அந்த ஏந்திழை மஞ்சத்துக்கு அழைக்கும் பொழுதும் அவன் உள்ளத்தில்கூத்தாடுகிறது. காரணம்? காதலின்பத்தில் திளைத்து, அது கருவாக வளர்ந்து விட்டால், கஷ்டப்படுகின்ற பட்டியலில் இன்னொரு ஜீவனல்லவா சேர்ந்துவிடும்? உள்ளத்தில் ஏற்படும் இந்த உணர்ச்சியை மெள்ள மனைவிக்கு மனம் விட்டுச் சொல்லுகிருன். பின் வேறுயார் அவன் துயரத்தைக் காது கொடுத்துக் கேட்கப் போகிருர்கள்?

'நெஞ்சிலிவ்வாறு—நினைந்
தங்குரைக்கின்ருன்:—'அடி
பஞ்சைப் பரம்பரை நாமடி! பிள்ளைகள்
பற்பலர் ஏதுக் கென்பான்.'

மஞ்சத்து மனைவி அழைக்கும் பொழுது ஏற்படும் எண்ணங்கள் இப்படியானல், இல்வாழ்க்கையில் அவன் அனுபவிக்கும் இன்பம், எத்தன்மையதாய் இருக்கும் என்பதைக் கவிஞர் நமது சிந்தனைக்கு விட்டுவிடுகிருர்.

ஏழையின் 'இன்பம்' இப்படிப் பட்டதுதான். கஞ்சிக்கில்லாதவன் காதல் வாழ்க்கையைப் பற்றிக் கனவு காண்பதுகூடக் குற்றமாயிற்றே! குமுறுகிறது அவன் உள்ளம். வயிற்றுப்பெட்டி நிரம்பினல்தானே வாழ்க்கை இனிக்கும்?

'கஞ்சி பறித்தார்—எழுங்
காதல் பறித்தார்'

கஞ்சியைய அவனிடமிருந்து பறித்து விட்ட அந்த 'இரக்கமுள்ள' மனித இனம், உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழவேண்டிய காதலையே பறித்து விட்டதாம். எத்துணை ஏக்கம் நிறைந்த வேதனை!

இயற்கையின் பராமரிப்பில் காதல் வாழ்க்கை நடத்துகின்ற சிட்டுவும் அணிலும் வாழ்கின்ற நிலை 'சதிக்கூச்சல், குழப்பங்கள், கொத்தடிமைத்தனம்' கொஞ்சமும் இல்லாத நிலை. எண்ணங்கள் போலவிரிந்த வானும், வானக் காதலன் அணித்த தண்முத்தாரத்தை அணிந்து மேனி சிலிர்த்து மகிழும் அந்த மல்லிகைத்தையலும், முகில் கண்டு வண்ணச் சிறகு விரித்தாடும் மயிலும் வாழ்கின்ற நிலை. கண்ணின் வழியாகக் கருத்தில் இன்பம் பாய்ச்சிடும் கவின்மிக்க நிலை. ஆனல், அறம் செழிக்க—அன்பு தழைக்க வாழவேண்டியவன் வாழ்கின்ற நிலையோ,

'—கெட்ட
வஞ்சகம் சேர் சின்ன மானிடச்
சாதிக்கு
வாய்த்த நிலை இதுவோ!'

ஏங்குகிருன் குடும்பத் தலைவன்! அவனு ஏங்குகிருன்? இயற்கையின் வழியை சுட்டிக்காட்டி, இன்பத்திற்கும் மனிதனுக்கும் இடையூருக, அவனே—அவன் இனமே-ஏற்படுத்தியிருக்கும் ஏழ்மையை கவிஞர் எள்ளி நகையாடுகிருர் அவன் வாயிலாக! சதிக்கூச்சல் இல்லாமல் சஞ்சரிக்கும் அணில், சிட்டுக்களைக்காணுகின்றமனிதன், எண்ணங்கள் போல விரிந்த ஆகாயத்தின் கீழ் வாழுகின்ற மனிதன். இயற்கையளிக்கும் இன்பப் பிரவாகத்தை இதயத்திலே தேக்கி மகிழ வேண்டிய மனிதன், ஏன் 'வஞ்சகம் சேர் சின்ன மானிட' சாதியானுன் என்று கவிஞர் உள்ளம் வேதனைப்படுகிறது; புழுங்குகிறது. அந்த நிலையை எடுத்துக் கூறவும் அவர் வாய் கூசுகிறது. 'இதுவோ!' என்று அவர் கவிதையை முடிக்கின்ற நயம், புரட்சிக் கவிஞருக்கு உலக மகாகவி என்ற முத்திரையை அளித்து விடுகிறது.

★

பொன்னுக்காக வேந்தர்களைப் புகழ்ந்து பாடிவிட்டு, மண்ணையும் பெண்ணையும் மாயாவாதமாக்கி, கண்ணுள்ளவர்களைக்கூட காண முடியாமல் ஆக்கிடும், பண்டைப் புலவர்களின் பரம்பரையல்ல பாரதிதாசனுர். இயற்கையின் காட்சிகளைப் பின்னணியாக்கி, மனிதர்களின் சோக நிலையை சொற் சித்திரங்களாக்கி, படிப்போர் உள்ளத்தில் சிந்தனையோடு கூடிய எழுச்சியைத் தூண்டிவிடும் அரிய சாதனையை 'மக்கள் நிலை' என்ற கவிதையிலே செய்து முடிக்கிருர். அவருடைய ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு வகைச் சுவையுடைய தனி இலக்கியம். அதை அனுபவித்து அனுபவித்து, துருவி ஆராய்ந்து, ஆங்கில இலக்கியத்தில் மில்டன் பெற்றிருக்கும் ஸ்தானத்தை அவர் பெறச் செய்ய வேண்டியது திராவிடரின் கடமையாகும். இல்லாவிட்டால்'அவாள்' பரம்பரை நியதியை ஒட்டி, வருங் காலச் சமுதாயத்திடமிருந்து கவிஞரின் கவிதைகளை இருட்டடிப்பு செய்து விடுவார்கள்!

★

மலர்த்தோட்டம்

கருணானந்தம்

மெய்ம்மையைப் போற்றி வாழும் மேன்மையாம் தமிழர் நாட்டில்
கைம்முதல் கல்வி யின்றிக் கவிகளை எழுதப் போந்தோர்
பொய்ம்மையின் எல்லை யாகும் புராணமே செய்தார்; இன்ருே
செய்ம்முறை நன்க றிந்து சீர்திருத் தங்கள் செய்து

பாட்டிலே புதுமை கண்டான் பாரதி தாசன் என்பான்
நாட்டிலே மக்கள் துன்பம், நலிவுகள், வறுமை, சூழ்ச்சி
ஏட்டிலே விரித்து ரைக்கும் ஏழையின் தோழன் சீர்த்தி
காட்டிட என்ருல் ஆமோ? கண்ணுளோர் காண வேண்டும்!

உவமையிற் புதுமை யென்ன; உளந்தொடும் உணர்ச்சி யென்ன;
நவநவக் கருத்தைக் கூறும் நடையிலே எளிமை யென்ன;
கவலையைத் தீர்க்கும் இன்பக் கவிநயம், நகைப்பு மென்ன!
அவனையிந் நாட்டார் நன்ருய் அறிந்திட வில்லை யின்னும்!

கல்வியின் உயர்வு சொல்வான்; காதலின் பெருமை சொல்வான்;
நல்லினைக் குடும்ப மாற்றும் நடைமுறை நயந்து சொல்வான்;
பல்சுவை, விதவை துன்பம், பழந்தமிழ் இனிமை சொல்வான்;
அல்வழி யால்நு ழைந்த ஆரியத் தீங்கும் சொல்வான்!

செந்தமிழ் நடையை நல்ல தீர்ப்புமே தெளிவாய்க் காட்டும்;
சுந்தர இயற்கை மாண்பை அழகின்நல் சிரிப்புத் தோற்றும்;
விந்தையாய் இல்ல றத்தைக் குடும்பவி ளக்கு வீசும்;
அந்தமாம் இருண்ட வீடு அறிவிலார் வாழ்வைப் பேசும்!

இன்னிசைத் தமிழர் பாட்டை இசையமு(து) எடுத்துக் காட்டும்;
மன்னிய காதல் துன்பம் மாண்எதிர் பாரா முத்தம்;
இன்னமும் இயம்புங் காதல் நினைவுகள் என்ற நூலும்
பன்னிற மலரின் தோட்டம் பாரதி தாசன் பாட்டே!

பாண்டியன் பரிசு கூறும் பழந்தமிழ்ச் சுவையும், பண்பும்
வேண்டிய தொளித்து விட்டு, வெறுங்கதை பேசி வீணில்
தாண்டிடும் பண்டி தர்க்குச் சாட்டையாம் தமிழி யக்கம்!
மாண்டுபோம் உள்ளத் திற்கு மருந்துபோல் உயிரை யூட்டும்!

பாரதி தாசன் பாட்டைப் பயின்றிடும் பொழுதென் னெஞ்சில்
வீரமும், புரட்சி காணும் வேகமும், தமிழில் அன்பும்,
தீரமும், புத்து ணர்வும், சீர்திருத் தத்தில் நோக்கும்,
பூரண மாகத் தோன்றும் புதுமையை என்ன சொல்வேன்!

★———★———★

சிலை வைப்போம்!

கவிஞர்-சுரதா

முழங்காலைத் தொடுகின்ற கூந்தல் உள்ள
முனிவர்களின் மனைவியரைக் கூடும், கள்ளப்
பழக்கமுள சிவன்மீது பாடல் பாடும்
பண்டாரப் புலவர்களால்; பிறரால்; சத்து
இழந்திருந்த செந்தமிழை; முறுக்கு ஏறும்
எண்ணத்தால், கற்பனையால், முறையால், மீண்டும்
எழுந்திருக்க வைத்துளபா ரதிதா சன்போல்
இன்னொருவர் இந்நாட்டில் இப்போ தில்லை!

★

மடையரெலாம், ஆரியர்கள் புனைந்து வைத்த
மதத்திற்கும், கடவுட்கும் தாசர் ஆனார்.
முடிவேந்தர் பாராட்டைப் பெற்ற கம்பர்;
முன்னாளில், திருவொற்றி யூரில் வாழ்ந்த
வடிவழகி, வேல்விழியாள், மென்கு ரும்பை
வல்லிஎனும் தாசியிடம் தாசன் ஆனார்.
எடுத்திடடா கொலைவாளை—என்று சொன்ன
இவரோஓர் அறிஞர்க்கு தாசன் ஆனார்!

★

வெடித்தவுடன் விரைந்தோடும் ஆம ணக்கின்
விதைஎன்றால், பாரதிக்குப் பொருந்தும். கீழே
அடித்தவுடன் மேலெழும்பும் பந்து என்றால்,
அது புரட்சிக் கவிஞருக்கே பொருந்தும். வாழ்வில்
இடர்பட்ட பாரதியும் இவரும், யாப்பின்
இணைமோனை போன்றவர்கள். தமிழைக் காக்கத்,
தொடுத்துநமக் களித்துள்ள இருவர் பாட்டும்,
சொத்தைவரிக் கூட்டமல்ல. கருத்தின் சத்தம்!

★

பெண்டிரை விடமென்றும், வேம்பு என்றும்,
பாடியவர் பட்டினத்தார். பெண்டி ரைப்பூச்
செண்டென்றும், செங்கரும்புத் துண்டு என்றும்,
செப்புமிவர், பட்டினத்தார் பகைவன். தெய்வச்
சண்டையிட்ட தேவாரப் பார்ப்பான், ஞான
சம்பந்தன் கொள்கைதனை, வாட்டி வைத்த
முண்டாசு பாரதியின் தொண்டன்! சாவின்
முடிவுள்ள மணல்உலகின், கீர்த்தி சேர்த்தோன்!

★

உவமைக்கு இடைக்காடன். அழுத்த மாக
உரைப்பதிலே மணவாள தாசர். எண்ணம்
தவறென்றால், அங்கேயே, அந்தப் போதே
தடுக்கும் உயிர் நக்கீரன். வெண்சி ரிப்புச்
சுவையோடு எழுதுவதில், நல்லூர்—ராமச்
சந்த்ரகவி ராயருக்கு இவர்தான் ஈடு.
சிவன்திருமால் நடத்தைதனைக் கவியால், கிண்டல்
செய்வதிலே இரட்டையரில் ஒருவர் ஆவர்.

★

சதிசெய்யும் ஆரியத்தை, மதத்தைப் பற்றிச்
சத்தமிட்டுத் தினந்தோறும் பேசிப் பேசி
எதிர்ப்பினிலே வளர்ந்துள்ளோர், இந்த நாட்டில்
ஏழெட்டு பேர்உண்டு. எனினும், அந்த
மதிப்புள்ள மனிதர்களுள் இவரே, மன்னர்
மாணிக்கம். மற்றவர்கள், பவளம், முத்து.
உதிக்கின்ற செங்கதிரோன், இவர்தான் என்றால்,
ஒளிவிளக்குப் பேர்வழிகள் எதிர்நிற் பாரா?

வேரடிக்கு வாருங்கள் அத்தான், காதல்
வினைபுரிவோம் என்றிடுவாள், மங்கை. வேம்பின்
வேரடிக்கு வாருங்கள், நீங்கள் வேண்டும்
வரம்பெறலாம் என்றுபூ சாரி சொல்வான்.
வேரடிக்கு வாருங்கள் என்பார். பந்து
விளையாட சிறுவரெலாம். இவரோ, காய்ந்த
வேரடுக்கி வாருங்கள், தீவ ளர்ப்போம்;
வேண்டாத மதநூலை எரிப்போம் என்பார்!

★

ஓம்ரீங்யங் எனக்கூறி. சுருட்டு வோரை,
உதைத்தால்தான் சரிப்படுவர். எதற்கும், நாட்டில்
ஆம்போடும் ஆசாமி, முன்னேற் றத்தை
அடைக்கின்ற மரக்கதவு! ஆக்கித் தின்னும்
சேம்பென்று நினைக்கின்றான் வடக்கு நாட்டான்,
செந்தமிழா நமைஎல்லாம். இக்கூட் டத்தைப்
பாம்பென்று நீஉணர்க. உடனே இந்தப்
பகல்நேரத் திருடர்களை விரட்டு என்பார்.

★

அணில்முதுகு முக்கோடுச் சைவர்; ஆற்று
அரங்கத்து எம்பெருமான். கருங்கல் காலில்,
மணிக்கணக்கி லேவீழ்ந்து வணங்கும் பக்தி
மான்களெலாம், இவர்நூலைத், துன்பஞ் செய்யும்
பிணியென்பர். இப்பேச்சைக் கவிஞர், கேட்டால்,
பேயர்களே! மேடையிதோ; நானும் வந்தேன்;
துணிவுண்டா வாதமிட? எங்கே? என்று
சுயமரியா தைக்கேள்வி ஆரம் பிப்பார்.

★

திருடுதற்கு நிலைமைதனை ஏற்ப டுத்தும்,
திருந்தாத சட்டங்கள்; நொந்தும் வெந்தும்,
நுரையற்ற கண்ணீரைச் சிந்திச் சிந்தி
நிலந்தன்னை நனைப்பவர்கள்; இதைத் தொடர்ந்து
நெருக்கடிகள். இவ்வளவும் இருத்தல் கண்டு,
நெற்கதிரை அறுக்கின்ற தமிழா. இன்று
இருட்டறையில் உள்ளதடா உலகம் — என்று
எவன்சொன்னான் இவரைப்போல் இந்த நாட்டில்?

★

பதர்கலந்த செந்நெல்லைப் புடைத்தல் போலப்
பைந்தமிழில் படிந்துள்ள பிறர்சொல் போக்கிப்
புதுவளர்ச்சி தருவதிலும்; பிறந்த நாட்டில்
புரட்சிதனை வளர்ப்பதிலும்; புதிய பூவின்
மதுபோன்ற கவியெழுதி, மாந்தர் தம்மை
வசமாக்கிக் கொள்வதிலும் இவரைப் போல
இதுவரைக்கும் கவிமனிதன் பிறந்த தில்லை,
இந்தஇரு பத்துநூற் றாண்டு தன்னில்!

★

மங்கலச்சொல் வைத்தெழுதும் வழக்கம் எல்லாம்
மலையேறிப் போயிற்றாம். ஆமாம். மாசம்,
திங்களென மாறட்டும். இதுதான் வேண்டும்.
தெளிவாகச் சொல்வதெனில், வடசொல் வேண்டாம்!
கங்கைமனம் நம்மவர்க்கு எதற்கு? நாமோ
காவிரியின் நினைப்பாளர்—என்று கூற
இங்கொருத்தர் இருக்கின்றார் என்றால், அந்த
இரணியனின் வாழையடி இவர்தான் கண்டீர்!

★



ஊர்ஊராய் ஏடுகளைத் தேடி, ஏட்டின்
உட்புறத்தில் பதம்மாற்றி, ஆரியத்தை
வேர்ஊன்ற வைத்து,மொழி மோசம் செய்த
விடப்பாம்பு மனிதர்க்கும்; வஞ்ச கர்க்கும்;
நீர்ஓசை வருகின்ற கடலின் ஓரம்
நீண்டகருங் கற்சிலைகள்! நம்மொ ழிக்கு,
சீர்தந்த இவருக்கோ, இன்னும் நாட்டில்,
சிலையில்லை. இதுநமக்கு மிகவும் வெட்கம்!

★

உங்கள் பார்வை

மாரிசாமிக்கு 'மாலுமி' கொடுத்த சூடு அவரால் மறக்க முடியாத அளவுக்கு இருக்கிறது.

-எம். முனுசாமி, அ.மந்தகரை

சில கட்டுரைகளில் வடமொழிச் சொற்கள் இடம் ஏற்காமல் இருந்தால் நலமாக இருக்கும்!

-சே. அப்துல் கரீம், காரைக்குடி.

இந்த இதழின் தலையங்கமான 'விடுதலை பாரே! விடுதலையாரே!' மிகஅருமை. சரியான சாட்டையடி! கொஞ்சமாவது உரைத்திருக்கும். உணர்ந்திருக்கலாம், சுயஉணர்வு இருந்தால் ''ஊசி'' யார் இனியாவது, ''கன்னுபின்னு'' நடையிலே தன் மட்டரகப் போக்கை காண்பிக்காமல் இருப்பாராக. 'மாலுமி' சுழல் விளக்கில் சக்கை வாங்குகிறார். வளர்க அவர் முயற்சி.

-அரு. அழகப்பன், ஆத்தங்குடி.

'இயல், இசை, கூத்து' என்ற புதிய பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறது; மகிழ்ச்சிதரக்கூடியது. இந்தப் பகுதியில் நம் இயக்கக் கலைஞர்கள் எழுதும் கதைகள் என்ன என்ன வென்பதை அறிந்து கொள்ளலாம்.

—ஏ. கே. நடராசன், சென்னை-15

''முரசொலி எட்டுப் பக்கத்தில் ஒலிக்கிறதே, இது போதுமா?'' என்று வருத்தமுடன் வினவினேம். வருத்தமுறேல் என்று கூறி முரசைதட்டி பன்னிரண்டு பக்கத்திற்கு ஒலித்தீர்கள். முரசொலியில் எழுத்தை சிறிய தாக்கி செய்தியை அதிகம் தருவீர்களேயானல் அதுவே எங்களுக்கு பேரின்பமாகும்.

—ராஜு திருவிடைமருதூர்.

'சிறுகதைப் போட்டி' யொன்று முரசொலி அண்ணுவால் வழங்கப்பட்டால் நலம் என்று எண்ணுகிறேன்.

-அரு. பொன்னுசாமி, புத்தூர்

முரசொலியில் சிறுவர் பகுதியில் கதைகளை எழுதுவதற்குப் பதிலாக தி. மு. க வின் கொள்கைகளை தொடர் கட்டுரையாக எழுதி விளக்கினல், மாணவர்களாகிய நாங்கள் அதைஅறிந்து கொள்கை வீரராக விளங்கலாம் என்பது என் எண்ணம்.

-கா. ம. நாகலிங்கன், காங்கயம்.

ஏடாத் தம்பி,......

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

புன்மொழிகளையே வீசப்பெறுவர். அதிலும் மொழி வீசும் துறையிலே ஈடுபட்ட புலவர்கள் உலகிலே புத்தம் புதிய புரட்சியை ஒருவர் வெற்றிகரமாகச் செய்து வருவது கண்டால், பொச்சரிப்பின் விளைவாகப் புன் மொழி, மாரிபோல் பொழியத்தானே செய்யும்

பாரதிதாசன், இந்த மாரியைச் சட்டை செய்ய வில்லை. புரட்சியில் ஈடுபட்டுள்ளவருக்கு இதற்கு நேரம் ஏது? போரிட்டார், போரிட்டார், போரிட்டுக்கொண்டே இருக்கிறார்! வென்றார், வெல்கிறார், வெற்றி பெற்றபடியே இருப்பார்!

அவர்பெற்ற வெற்றிகளிலே ஒன்று அவருடைய கவிதைகளை இன்று மக்கள் அறிந்து கொண்டார்கள், புரிந்துகொண்டார்கள், ரசிக்கிறார்கள், பயன் பெறுகிறார்கள். ''தோடுடைய செவியன் விடை ஏறி ஓர் தூவெண் மதிசூடி'' வருபவனைப் பற்றிக் கவிதைகளைக் கேட்டுக் கேட்டு திருநீறு பூசு முறை கற்றுக்கொண்ட மக்கள், ''இரும்புப் பெட்டியிலே இருக்கும் எண்பது இலட்சத்தையும் கரும்புத் தோட்டத்திலே வருஷம் காணும் கணக்கினையும்'' எண்ணிக் களிக்கும் தம்பிரானைப்பற்றிப் பாரதிதாசன் பாடிடக்கேட்டதும், பதைத்து எழுந்து, ''பாதகா! படுமோசக்காரா! பக்தியின் பெயரால் இப்படியா போக போகத்தில் புரள்கிறய்! பார்உன்னை என்ன செய்யப்போகிறேம்!'' என்று இன்று கொதித்துக் கூறப் போகின்றனர். நாளை?

ஆம்! நாளைக்கு என்ன நடக்கும் என்பதை எண்ணும்போதுதான் ''புரட்சிக் கவிஞரே பாரதி தாசன்; ஐயமில்லை'' என்று அனைவரும் கூற முடிகிறது அவர் போர் முகாம் அமைத்துவிட்டார்; போர் வீரர்களைக் கூட்டிவிட்டார்; படைக்கலன்களும் தயார்; முரசும் கொட்டிவிட்டுக் கூப்பிடுகிறார்.

''கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே''

என்று. அத்தக்குரல், காற்றில் மிதந்துவரும் கீதமாக மட்டுமின்றி, கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்துவரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட்போரின் வளைந்த முதுகை நிமிர்த்திவிடும் வீரக் குரலாகி விட்டது! எனவே தான் நமக்கொரு வால்டேர் கிடைத்துவிட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்து விட்டார். நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார். அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார். அவர் வாழ்க! அவர்திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர்வெற்றியினல் நமக்கு வெற்றி ஓங்குக!—என்று மனமார நாம் கூறுகிறேம். நாம் மட்டுமா! நாடு கூறுகிறது.

நாட்டு மக்களுடைய இந்த மகிழ்ச்சியின் ஒரு சிறு அறிகுறியே இதுபோது கவிஞருக்கு அளிக்கப்படும் பொற்கிழி. இதிலே குவிந்துள்ள ஒவ்வோர் காசும் பேசக் கூடுமானல் மணிக்கணக்கில் பேசும் கவிஞரின் பெருமையை; அதனல் சமுதாயம் பெற்ற பெருமையை. பொற்காசுகள் பேசினலும் கூட, புரட்சிக் கவிஞரின் செவியில் அந்த ஒலி புகாது. எப்படிப் புகும்? அவருடைய செவியிலே ஆலைச்சங்கு, சுண்ணம் இடிக்கும் சுந்தரியின் பெருமூச்சு, பாட்டாளியின் குமுறம், பணமெனும் கொடி கட்டிய படகு வருமா என்று எதிர்பார்த்து ஏங்கும் ஏழையின் ஏக்கமொழி, ஏழில் ததும்ப இளமை ததும்ப உள்ள மங்கை மஞ்சத்தில் குறட்டைவிடும் கிழ மணாளனைக் கண்டு கண்ணீர் விட்டுக் கதறும் ஒலி—இவைபுகுந்து, கண்களிலே அனலையும் கிளப்பிவிட, ''ஏடா! தம்பி! எடடா பேனு! கொண்டுவா மைக்கூடு; இந்தக் கொடுமைகளைக் களைந்தே யாகவேண்டும்; இன்றே களைந்தாக வேண்டும்'' என்று முழக்கமிடுகிறார்! அந்த முழக்கம் இந்நாளில் நாம் பெற்ற கருவூலம்! அவர் நமக்களித்த அழியாத செல்வம்! அவர் வாழ்க! வெல்க!! ஃ

கொலை வாளினை...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

புதரினில் தூங்கிடுமோ?''
கிலியை விடுத்துக்
கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும்உத் தேசமில்லை
—சொந்த
வலிவுடையார் இன்ப
வாழ்வுடை யார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை'

என்று எடுத்துக்காட்டி, தொழிலாளர் தங்கள் சொந்த வலிமையால், உரிமையான இன்ப வாழ்வை அடைந்தே தீருவர் என்று உறுதி கூறுகிறார்.

இனி, ஏழைகளைப் பற்றியும் உலக மக்களுக்கு உணர்த்தக் கருதி, உலகப்பனை விளித்துச் சொல்கிறார்:

ஓடப்பரா யிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால்,
ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர்
எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார்
உணரப்பா நீ!

என்று. இதைக் கேட்டுவிட்டால், ஏழை மட்டுமின்றிக் கோழையாய்த் திரிபவனும் புரட்சிக்குத் தயாராகிவிடுவான். அப்படி அனைவருமே புரட்சிக்குத் தயாராகும் நிலை பிறந்துவிடிலோ, அப்பொழுதும் போர்க்களத்தில் நின்று முரசொலி முழக்குகின்றார் புரட்சிக் கவிஞர். போர்வீரர்க்கு அவர் தரும் புத்துணர்வு இழந்த உறுப்புக்களை மட்டுமல்ல; நீங்கிய உயிரையே திரும்பத் தந்து, புது வாழ்வளித்து, போர்க்களத்தில் வெற்றி வாகை சூடச்செய்யும் தன்மைத்து. கேளுங்கள் அம் முழக்கத்தை,

''வலியோர் சிலர் எளியோர்
தமை வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளுதல்
நிலையாம் எனும் நினைவா?
கொலை வாளினை எடடா
மிகு கொடியோர் செய லறவே
குகைவாழ் ஒரு புலியே
உயர்குண மேவிய தமிழா!
இலையே உணவிலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலிலை எனவே முர
சறைவாய் முர சறைவாய்''

'கொலை வாளினை எடடா' என்றவுடனேயே கொலைவாள் என்று கூறுவதிலே உள்ள உணர்ச்சி தெளிவாகின்றது. வாள்—கொலை செய்வதற்குரிய வாள் என்பது மட்டுமன்றி, இதுநாள்வரை கொலைத் தொழிலில் ஈடுபடாது உறையிற்கிடந்த வாள் என்பதும், இனி உறையினின்று உருவிவிட்டால், கொலை மாபாதகமானலும், உரிமையைஉண்மையாக்க நீதியை நிலைநாட்ட, உலுத்தரின் உயிரைக் குடித்தே தீரும் என்பதும் 'கொலை வாளினை எடடா' என்பதிலே கேட்கப்படுகின்றது. உணவில்லை, கதியில்லை என்றுகதறும் மக்களைக் காப்பாற்ற, வீணரை வீழ்த்த, ''கொலை வாளினை எடடா''என்று முழக்குகிறார் கவிஞர்.

ஆணுக்குப் பெண்ணும், பார்ப்பனருக்குச் சூத்திரரும், பணக்காரருக்கு ஏழைகளும், மிராசுதாரனுக்கு உழவனும், முதலாளிக்குத் தொழிலாளியும், உயர் சாதியினருக்குப் பறையரும், ஆள்பவருக்கு ஆளப்படுபவரும், உலுத்தருக்கு உழைப்பாளரும், எத்தருக்கு ஏமாளிகளும், எவரும், எங்கும், எக்காரணத்தாலும், எவ்வகையாலும் அடிமையாக இருக்கக்கூடாது, இருப்பது முறையாகாது என்று முழக்குகின்றார் கவிஞர் பாரதிதாசன் தமது கவிதை முழுதும்; இந்நாட்டு மக்கள் இக்காலத்தும் பலப்பல வகையிலும் அடிமைப்பட்டிருப்பதைக்கண்டு காணப் பொருது தமது கருத்துக் கண்களினின்று கனல் கக்கியுள்ளார்; அந்தத் தீப்பொறிகளே அவரது கவிதைகள்.

''இது எனது'' என்னுங் கொடுமையைத் தவிர்ப்போம், ''ஒரு பொருள் தனி'' என்னும் மனிதரைச் சிரிப்போம், ''கூழுக்கு ஒருவன் அழும்படி ஆண்டிடும் கோலை முறித்திடுவோம்,'' ''ஏழை முதலாளி இல்லாமற் செய்திடுவோம்,'' ''சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள், தாங்கி நடை பெற்றுவரும் சண்டையுலகிதனை, ஊதையினில் துரும்புபோல் அலைக் கழிப்போம், பின்னர் ஒழித்திடுவோம், புதியதோர் உலகம் செய்வோம்,'' ''பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்,'' என்று புரட்சியின் விளைவாகிய புது உலகை, புது வாழ்வைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

புரட்சி மலர்ந்து, புத்துலகம் பூத்து, புதுவாழ்வு மணங்கமழப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அரும்பெருந் தொண்டுகளாற்றியுள்ளார். ஆங்கில நாட்டுக் கவிஞர் ஷெல்லியைப்போல, அமெரிக்க நாட்டுக் கவிஞர் வால்ட் விட்மனைப் போல, இஸ்லாமிய இனத்திற்குக் கிடைத்த கவிஞர் இக்பாலைப்போல. திராவிடநாட்டிற்கு, தமிழ் இனத்திற்குக் கிடைத்த ஒப்பிலா அறிஞர் புரட்சிக் கவி பாரதிதாசன். அவருடைய பணியே புரட்சிக்கு முதற்பணி; எந்நாளும் நின்று நிலைத்துப் பயன் விளைக்கும் அரும்பணி; எவருக்கும் நலம் விளைக்கும் பெரும்பணி: தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் வாழ்வளித்த உயிர்ப்பணி; இந்நாட்டிளைஞர்கட்கெல்லாம் இன்பப்பணி; அந்தப் பணியே புரட்சிக் கவிஞருக்கு அணி! அப்புரட்சிக் கவிஞரே தமிழகத்தின் தலைமணி! ஃ

புரட்சிக்......

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

சீர்திருத்தம் என்பது முயற்கோடாக இருந்த காலம் அது.

அக்காலத்தில் நமது கவிஞர் சமூகப் புரட்சி செய்ய எண்ணினர். தமிழ் நாட்டின் சமூக நிலை அவரை அவ்வாறு எண்ணச் செய்தது. தமிழர்கள் நம்பி வாழும் ஆரியத்தைக் குறை கூறினல் தமிழர்களே எதிர்ப்பார்கள் என்பது கவிஞர்க்குத் தெரியும். தம்மினத்தவரே தமக்கு எதிரிகளாகக் கிளம்புவர் என்பதைக் கவிஞர் அறியாதவரல்லர். எனினும், கவிஞரின் வன்கண்மை—அஞ்சா நெஞ்சம் — ஆரியத்தைச் சாடி சமூகப் புரட்சிக் கவிகள் புனையத் தூண்டிற்று. தமிழர் வாழ்வை அரித்துவரும் ஆரியச் செல்லுகள் இவை இவை எனத் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டினர். கவிஞரின் புரட்சிக் கவிகளைப் படித்த தமிழ் நாட்டு இளங் காளைகள் துள்ளி யெழுந்தனர். ஆரியப் படுகுழியிலிருந்து தமிழர் மீளக் கை கொடுத்துக் காத்த, கரையேற வழிகாட்டிய கவிஞரை, 'புரட்சிக் கவிஞர்' எனப் போற்றினர். வாழ்க புரட்சிக் கவிஞர்! தமிழர் வாழ்வுப் புரட்சி ஓங்குக! ★

பாரதிதாசன் திருவுள்ளம்

... நாரண-துரைக்கண்ணன் ...

"பாரதி — பாரதிதாசன், இருவருக்குமிடையே எவ்வளவு வேற்றுமை? கவிஞர் கனக—சுப்புரத்தினம் எப்படி சுப்பிரமணிய பாரதியாருக்குத் தாசனானார்? தேச சுதந்திரத்தில் ஆர்வங் கொண்டு, தேசீய கீதங்கள் பாடிய பாரதியாருக்கும், தேசீய இயக்கத்துக்கு மாறுபட்ட கொள்கையுடைய தன்மதிப்பு இயக்கத்தைச் சார்ந்த கனக சுப்புரத்தினத்துக்கும் தோழமையும், ஆசிரிய—மாணவத் தொடர்பும் எவ்விதம் ஏற்பட்டது? சக்தியையும், கண்ணனையும் பாடிய ஆஸ்திகரான பாரதியாருக்கும், கடவுள் கொள்கையையே கேலி செய்யும் நாஸ்திகரான சுப்புரத்தினத்திற்கும் நேசம் எவ்வாறு உண்டாயிற்று? பாரதியாருடன் நட்பு கொண்ட அக்காலத்தில் சுப்புரத்தினம் தேசீயவாதியாக இருந்திருக்கலாம்; ஆஸ்திகராய் இருந்திருக்கலாம். ஆகவே தேச பக்தராகவும், ஆஸ்திகராகவும் இருந்த பாரதியாருக்குத் தாசர் ஆகக் கவிஞர் சுப்புரத்தினம் அச்சமயம் விரும்பியிருக்கலாம். தன்மதிப்பு இயக்கக் கொள்கையைத் தம் கொள்கையாகக் கொண்ட பின்னரும் பாரதிதாசனாகவே இருந்து வருகிறாரே! ஏன்? இது பொருந்துமா?" என்று பலரும் ஐயங்கொள்ளுகின்றனர்; கேட்கின்றனர். ஏன்? நான்கூட இவ்விதமாக எண்ணுவதுண்டு. இச்சந்தேகத்தைக் கவிஞர் பாரதிதாசனிடமே கேட்டுப் பதில் பெறவேண்டுமென்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன்.

நான் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் ஒருமுறை அருமையாக வாய்த்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு, நான் முல்லை பதிப்பகத்துக்குப் போனபோது, திருவாளர்கள் ஏ. அப்பாதுரை பிள்ளை எம்.ஏ., "புதுமைப் பித்தன்," தி. ஜ. ர., சுட—நாராயணன் முதலிய அன்பர்களும் கவிஞரைக் காண வந்திருந்தார்கள். கவிஞர் எங்களுடனெல்லாம் மிக இனிமையாகப் பேசி அளவளாவினார்.

எங்கள் வேண்டுகோளின்படி கவிஞர் சிருங்கார ரசம் ததும்ப இளமையில் தாம் பாடியுள்ள சில பாடல்களைப் பாடிக் காட்டினார்.

இதனிடையே நான் பாரதிதாசனைப் பற்றிப் பலருங் கொண்டுள்ள மேற்குறித்த சந்தேகத்தை மெல்ல அவரிடம் கேட்டுத் தெளிவித்துக் கொள்ள முயன்றேன்.

"உங்களுக்கும் பாரதியாருக்கும் நட்பு எப்படி ஏற்பட்டது? அவர் கொள்கைகளுக்கும், உங்களுடைய கொள்கைகளுக்கும் நிரம்ப வித்தியாசமிருக்கின்றனவே!" என்று நான் கேட்டேன்.

கவிஞர் புன்முறுவலுடன் பதில் சொல்லத் தொடங்கினார். "என் கொள்கைகளுக்கும், அவர் கொள்கைகளுக்கும் என்ன வேற்றுமையை நீங்கள் காணுகிறீர்கள்? நான் இன்று எப்படி இருக்கிறேனோ, என்ன கொள்கைகளைக் கொண்டிருக்கிறேனோ அப்படித்தான் பாரதியார் அப்பொழுது இருந்தார். அவர் கொண்டிருந்த கொள்கைகளைத்தான் நான் இப்போது என் கவிகள் வாயிலாக மக்களிடையே பரவச் செய்து வருகிறேன். பாரதியாருக்குச் சாதி சமயப் பற்றே கிடையாது. மக்கள் ஆண் பெண்கள் உட்பட அனைவரும் சரிசமமாக இருக்க வேண்டுமென்பதுதான் அவர் கருத்து. அவர் தம்மை ஒரு பிராமணர்; பிராமண சமூகத்தில் பிறந்தவர் என்று எண்ணுவது கிடையாது. அவர் கோயில் குளங்களுக்குப் போய்ப் பார்த்தது கிடையாது. கடவுள், ஆண்டவன் என்றுசொல்லுகிறார்களே, அதை எப்படி வணங்குவதென்றே அவருக்குத் தெரியாது. ஒரு சமயம் எங்களூரில் உள்ள பிரமுகர்கள் சிலர் முத்தியாலுப்பேட்டையிலுள்ள அம்மன் கோயில் ஒன்றில் தாங்கள்செய்யும் உற்சவத்தைக் காண வரும்படி பாரதியாரை அழைத்தனர். நானும் அதற்குச் சிபார்சு செய்தேன். பாரதியார் நிலை எனக்குத் தெரியுமாதலால், கோயிலுக்குப் போனால் இப்படி இப்படி யெல்லாம் நடந்துகொள்ள வேண்டும்; தருமகர்த்தாவிடம் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்று நானும் மற்றவர்களும் அவருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்து வந்தோம். பாரதியார் எல்லாவற்றுக்கும் தலையாட்டி வந்தாரேயொழிய, அங்கே போனதும் எங்களை வரவேற்க எதிர்நோக்கி வந்த தருமகர்த்தாவை இன்னாரென்று சொன்னதும், அந்தச் செட்டியார் முன்னிலையில் மண்டியிட்டுக் கும்பிட்டவாறு அப்படியே நின்றுவிட்டார். அதன் பின்னர், அவர் அம்மன் கோயில் கருப்பக் கிருகத்துக்குள் செருப்புக் காலுடனேயே நுழைந்து விட்டார். அவரைக் கூப்பிட்டவர்களுக்கு, 'ஏனடா, இவரை அழைத்து வந்தோம்' என்று ஆயாசமுண்டாகி விட்டது. பாரதியார் கண்ணனையும், சக்தியையும் பாடியிருக்கிறாரே என்றால், கடலை நோக்கியும், பூஞ்சோலைகளைப் பார்த்துமே அப்பாடல்களைப் பாடியிருக்கிறார். விபூதி, நாமங்களைப் போட்டுக் கொண்டு, பஜனை மடங்களில் பாடியும் ஆடியும் அவமாகக் காலம் போக்கிக் கொண்டிருந்த என்னை, இன்றுள்ள நிலைக்குக் கொண்டு வந்தவர் பாரதியார்தான். பாரதியாருக்குப் பூணூல் போட்டு, நாமம் இட்டு, அவரைப் பற்றி இல்லாத பொல்லாத கதைகளை யெல்லாம் இன்று அளப்பவர்கள் அவரை நன்கு அறியாதவர்களேயாவர். பாரதியாரைப் பற்றி இன்று வந்திருக்கும் விஷயங்கள் பெரும்பாலானவை கட்டுக் கதைகளேயாகும். அன்பர் வ. ரா. போன்று பாரதியாருடன் பழகிய இரண்டொருவர்தான் உண்மையான சில விஷயங்களை கூறியிருக்கின்றனர். பாரதியாரைக் குறித்து உண்மையாக வரவேண்டிய செய்திகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. பாரதியார் அன்றுள்ள நிலையில் தேச விடுதலையை முதன்மையாகக் கருதினார். 'இன்று அவர் இருப்பாரானால், என்னைப் போலவே, முழுக்க முழுக்க, சமூகச் சீர்திருத்தங் குறித்த கவிதைகளையே இயற்றியிருப்பார்" என்று கூறி முடித்தார்.

கவிஞர் பாரதிதாசனுடைய இப்பேச்சில் நானும், மற்றவர்களும் கொண்டிருந்த சந்தேக மனத்துக்கும் சரியான பதில் கிடைத்து விட்டது. ஆகவே, அதற்குமேல் நான் அவரை ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் பாரதிதாசன் உள்ளத்தைத் திறந்து பேசிய பேச்சிலிருந்து ஓர் உண்மையை உணர்ந்தேன். பாரதிதாசன் ஒரு சலர் நினைப்பது போல், தேச சுதந்திரத்தைக் குறித்துச் சிந்தனை செய்யாமலில்லை. "அரசியல் அடிமைத்தனத்தைவிட, சமூக அடிமைத்தனம் தமிழ் மக்களைப் பலவகையிலும் பாழ்படுத்தி வருவதால், முதலில் ஜன சமூகத்தில் காணப்படும் ஊழல்களை ஒழிக்க வேண்டும். அர்த்தமற்ற கொள்கைகளையும் மூடப் பழக்க வழக்கங்களையும் அறவே அகற்ற முயலவேண்டும். அப்போதுதான் நம் நாடு அன்னியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று அரசியல் ஆட்சியுரிமை கிடைத்தாலும், அதை வைத்து நிர்வகித்துக் கொள்ளத்தக்க திறமையும், ஆற்றலும் பெறும்" என்று அவர் எண்ணுவதாக நான் அறிந்தேன். இவ்விதமான அவருடைய உள்ளக்கிடக்கையை அறிந்த பின்னர், நாம் பாரதிதாசனின் கவிதைகளைப் படித்தால்—ஆராய்ந்தால்தான் அவர் தமிழ்ச் சமுதாயத்துக்கு—ஏன்? ஜன சமூக மனத்துக்குமே எவ்வளவு மகத்தான சேவை செய்து வருகிறார் என்று அறிந்து பாராட்ட முடியும்.

★

கனவல்ல!......

★ 10-ம் பக்கத் தொடர்ச்சி

சென்றேன்...அங்கே...? என் அத்தானும் அவளும்..நினைக்கவே என் நெஞ்சு பதறுகிறது...துப்பாக்கியின் விசையை அழுத்தினேன்... 'அய்யோ, சுசீ' என்றுகதறிய வண்ணம் என் அன்புக் கணவர் குருதி வெள்ளத்தில் மிதந்தார்.

ஜெயிலர் சொல்லப் போகும் செய்தியைக் கேட்க நான் தயாராகிக் கொள்ள வேண்டும். நான் என்று மரண தேவதையின் காலை முத்தமிட வேண்டும் என்பதை அவர்தான் கூறுவார். அவருக்கும், காதல்-வெறுப்பு-பொறுமை-எல்லாம் தெரிந்துதான் இருக்கும். ஆனால் இத்தகைய நிகழ்ச்சிகள் அவர் வாழ்வில்ஏற்பட்டிருக்காது. கெட்டதோ - நல்லதோ—அவர் அவரின் கடமையைச் செய்யத்தானே வேண்டும்! என்னையும், கொலை செய்யும் வரை யாரும் கெட்டவள் என்று கூறியதில்லை.

என் வாழ்வின் ஜீவ ஜோதியை நானே அணைத்து விட்டேன். நான் வரைந்த என் வாழ்வுச் சித்திரத்தை நானே கலைத்துவிட்டேன். ஜெயிலரைக் கண்டதும் என் உள்ளம் நடுங்கியது. அவர் என்ன கூறப்போகிறார் என்பதை அறிய விரும்பினேன். ஆனால்.....தயவு செய்து சொல்லாதீர்கள்; உயிர் போகும்வரை கயிற்றில் தொங்க வேண்டும் என்றுசொல்லாதீர்கள்!

5781: ஆம்! இங்கு என் பெயர் சுசிலா அல்ல! "5781...நீ செய்துள்ள குற்றத்திற்கு கருணைகிடையாது; நாளை..காலை உன்னைத்தூக்கி விடுவார்கள் — இது ஜனாதிபதியின் உத்தரவு." நாளை காலை பிணமாகி விடுவேன். நாளை மாலையை நான் காண முடியாது. நாளை கயிற்றில் தொங்குவேன்; நாளை கதிரவனைக் காணமுடியாது. நாளை ஆதவன் உதயமாகுமுன் என் வாழ்வு அஸ்தமனமாகிவிடும்;நாளை இவைகளைக்காணமுடியாது.இரவு இன்றோடு கடைசி; நாளை இரவின் தொல்லைகள் இருக்காது. நாளை வார்டர்களைப் பார்க்கமாட்டேன். 'கெடிகாரத்தை'க் காணமுடியாது. நாளை காலை ஊதும் சங்கின் ஒலி என் மரணத்தை ஒலிபரப்பும். சோளக் கஞ்சியும்—அச்சடித்த சோறும் அவுன்சுகீரையும் கிடைக்காது.

அதோ, அங்கு அலறுகிறது...என் மரண ஒலி...கதவு திறக்கிறது. "சுசிலா! எழு..."—ஜெயிலர் தன் பரிவாரங்களுடன் நின்று கொண்டிருந்தார்...என் இரண்டு கைகளையும் கயிற்றினால் பிணைத்து இழுத்துச் சென்றார்கள்...இதோ, டாக்டர் என்னை பரிசோதிக்கிறார். சாகும் போதுகூட என் உடல் நலம்கெடாமலிருக்கவேண்டுமாம் கயிற்றில் தொங்குவதற்கு பலம் தேவையாம்! விசித்திரம்; ஆனால் உண்மை. மாஜிஸ்டிரேட் என் தண்டனையை ஊர்ஜிதப்படுத்துகிறார்.

"சுந்தரவதனத்தை வேண்டுமென்றே கொலை செய்த உனக்கு மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் மரண தண்டனை அளிக்கிறார்"

'ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?'—ஜெயிலர் கேட்டார்.

'மரணத்தில் இன்பத்தைக் காண்கிறேன்...'என்றேன்.

கருப்புத் துணியால் என் முகத்தை மறைத்து விட்டார்கள். அதோ, தூக்குமேடை! மூன்று படிகளைத் தாண்டிவிட்டேன்... கயிற்றை என் கழுத்தில் மாட்டிவிட்டார்கள்...ஒரு நிமிடம்; கயிற்றில் தொங்கப் போகிறேன்...ஒரு நிமி...கயிறு என் கழுத்தை இறுக்குகிறது.....அய்யோ! அத்தான்...அத்...

★

'எழுத்தாணி'யின் கடைசிப் பக்கம்

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) சுடர்விழி வி. குப்புசாமி, செவ்வாய்பேட்டை, சேலம்.

பி. ஏ. காசிமலை; சின்னமனூர்.

(?) எக்குணம் படைத்தோன் தன்னை உயர்த்தியும் பிறரைத் தாழ்த்தியும் பேசுவான்? எழுதுவான்?

'கடைக்குணம்' கொண்டோர் மட்டுமல்ல; 'தலைக்குணம்' கொண்டிருப்பதாக கனவு காண்போரும் தலைக்கனம் கொண்டுவிட்டால் அப்படித்தான் பேசி, எழுத ஆரம்பித்து விடுகின்றனர்.

எஸ். ராமநாதன்; ஏழுகடல் தெரு, மதுரை.

(?) காதலன் காதலியை 'கண்ணே'என்று மட்டும் அழைக்கக் காரணம் யாது? கண்ணை விட முக்கியமானது இல்லை என்பதற்காகவா?அப்படியானால்கண்ணை விட முக்கியமானது இல்லையா ?

ஆமாம்; என் அனுபவத்தில் அப்படித்தான் தெரிகிறது!

(●) சுடர்விழி வி. குப்புசாமி; செவ்வாய்ப்பேட்டை; சேலம்.

(?) ஒரு பெண் குடும்பத்தின் அரசியானால் அவளது சிம்மாசனம் எது?

கணவனின் மடி!

(?) கல்யாணம் என்ருல் என்ன?

பிரம்மச்சரியத்தின் அந்தி நேரம்; வாலிபத்தின் நிலாப்பொழுது; வயோதிகத்துக்கு ஒரு 'இன்ப பிளாஷ் பேக்' சீன்!

முகமது காசிம்; கண்டோன்மென்ட்; பேங்களூர்.

(?) அண்ணவுக்கு நிதி அனுப்புவதாக இருக்கிறேன்—அனுப்பினல் பெற்றுக் கொள்வாரா?

அண்ண உம்மிடம் விரும்புவது நிதியை அல்ல! திராவிடத்திற்குத் தேவையான உண்மைத் தொண்டு—சலியா உழைப்பு-சாவுக்கும் அஞ்சாத தியாக உணர்ச்சி. இவைகளைத்தான் விரும்புகிறர். வேண்டுமானல் நீர் மாநில மாநாட்டு நிதி உண்டியலை நிரப்புவதைப் பற்றி அவர் தடைகூற மாட்டார்.

எம். என்; ஆண்டர்சன்பேட்டை.

(?) பனிரெண்டாம் தேதிய 'தினத்தந்தி' கேலிச் சித்திரத்தில் எல்லாக் கட்சியினரும் உண்டியல் எடுப்பதாக போட்டிருக்கிறதே: அது கம்யூனிஸ்ட் கட்சியின் 2 லட்ச ரூபாய் ஜனசக்தி உண்டியலை ஏன் தீட்டவில்லை?

தினத்தந்தியார் அதை ஒரு கட்சியாக மதிக்கவில்லை யென்பதற்கு இது ஒரு உதாரணம்!

பொன்முடி; ஆசிரியர், தஞ்சை.

(?) டால்மியாபுரத்தை கல்லக்குடியாக மாற்றிவிட்டால் வடவரின் ஆதிக்கம் ஒழிந்து விடாது என்று புத்தி சொல்லி வந்த 'அவசரசாமியார்' இப்போது சுடுகாட்டில் உள்ள அடையாளங்களை அகற்று விட்டால் கிளர்ச்சி செய்வேன் என்கிருரே: கற்களை அகற்றி விட்டால் மட்டும் ஆரிய—திராவிட வேற்றுமை ஒழிந்து விடுமா?

அப்படிச் செய்தால் ஆரிய திராவிடப் பிரச்னை முடிந்துவிடுமென்று அவர் சொன்னல் கூட நாம் ஆச்சர்யப்படுவதற்கில்லையே! பேனவுக்கு அடிக்கடி மசி ஊற்றுவதைப்போலவே, விநடிக்கு விநடி எண்ணங்களை மாற்றிக் கொள்ளும் அவசரக்காரர்கள் எதையும் சொல்வார்கள்; எதையும் செய்வார்கள்!

எஸ். கலைச்செல்வன்; கமுதி.

(?) ராஜாஜிக்கு ராமன் என்ன உறவு வேண்டும்?

இன்றைய மனிதனுக்கும் டார்வின் சொல்லும் குரங்குக்கும் உள்ள வம்சாவளி-ஒற்றுமை, ராஜாஜியின் இனத்திற்கும் ராமனுக்கும் உண்டு!

சீ. வரதராசன்; பொட்டனேரி.

(?) வளர்ந்தது நேருவா? இந்தியாவா?

அல்ல; அல்ல! வளர்ந்திருப்பது அவரது நாக்குதான்!

எஸ். எஸ். மணிபென்; கோட்டாறு.

(?) பதவியை பாதுகாப்பது எப்படி?

கால்களைப் பிடித்துக் கொண்டு—(சட்ட சபை நாற்காலியின் கால்களைத்தான்!) — இதுநாள் வரை காலம் நடத்திவரும் ராமசாமி படையாச்சியாரை இது பற்றி விசாரியுங்கள்! அனுபவப் பூர்வமாக பதில் கூறுவார்!

டி. பகவதி; கோட்டாறு.

(?) தற்புகழ்ச்சி கொள்பவர்கள் யார்?

பிறர் தன்னைப் புகழமாட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட புத்திசாலிகள்தான்!

சோமசுந்தரம்; இராசபாளையம்.

(?) உயிருக்குயிராய் வாழும் தம்பி; உயிருக்குயிராய் நேசிக்கும் காதலி—இவர்கள் இருவரில் ஒருவரைப் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டால் யாரைப் பிரிந்து யாரோடு வாழ்வது?

நீர் நேசிக்கும்காதலி உன் நாடாக இருந்தால், அவளுக்காக நீர் தம்பியை மட்டுமென்ன; தாயையே பிரிந்து வாழலாம்! தலையைக் கொடுத்தாவது அவளது சுகத்தைத் தேடலாம்!

திடசித்தன்; தஞ்சை.

(?) புடம் போட்டு எடுத்த வீராதி வீரர்களே! உங்களை விட்டுப் பிரிந்து செல்லும் தோழர்களும் உங்களிடமிருந்து புடம் போட்டு எடுக்கப்பட்டவர்கள்தான?

புடம் போடும் போது உதிர்ந்து போன சாம்பல் துண்டுகள்தான், அவர்கள்!

*

எதிரிகள் கோடி......

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

"மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும், மடையர்களும் இயற்றிடுவார் கடவுட் பாடல்" என்று முழங்கினர். கடவுள், மதம், மூடப் பழக்க வழக்கம், குருட்டு நம்பிக்கை, அரசியல், வாழ்க்கை,இயல் ஆகியவற்றின் பேரால் பெருங்குடி மக்கள் தனிப்பட்ட ஒரு சிலரால் ஏமாற்றப்படுவதைக் கண்டு மனம் புழுங்கினர்.

புழுங்கிய அவர் உள்ளத்தினின்றும் எழும்பிய தீப்பொறி கொடுமைக்குட்படுத்தப் பட்டோரின் உள்ளங்களில் கொழுந்துவிட்டெரிகிறது. புது உலகைப் புரட்சிக் கருத்துக்களிலே பூக்கச்செய்து புது உலகை அமைக்கப்போகும் புரட்சிக் கவிஞர், பழைய உலகைப் பார்த்துக் கேட்கிருர்:

"மண்மீதில் உழைப்பாரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண் மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம்"

இது நீதியா என்று கேட்கிருர்:

"முழங்காற் சேற்றினில் முக்கி விளைத்தவன்
மூடச் சகோதரன் பள்ளப் பயல்—அதை
மூக்குக்கும் நாக்குக்கும்
தண்ணீர்க் காட்டித் தின்னும்
மோசக் காரன் மேலாம்"

இது நேர்மையா என்று கேட்கிருர்:

கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளை யடிப்பதும் நீதியோ?

என்று கேட்கிருர்.

இத்தகைய புரட்சிக் கேள்விகளை இந்த நாட்டில் வேறு எந்தக் கவிஞனும் கேட்டதில்லை; கேட்கத் துணிவு கொண்டதில்லை. நம் புரட்சிக் கவிஞர் மக்களைப் பார்த்து மூடப் பழக்க வழக்கங்களென்னும் பழமைச் சேற்றில் புரளாமல் புரட்சி மணங்கமழும் பூங்காவில் உலவச் சொல்லுகிருர். இளமை யுள்ளங்களைப் பார்த்து, கன்னங் கருத்த இருட்டின் கறையாக, தொங்கும் நரம்பின் தூளாக வாழாமல் மக்களாக வாழச்சொல்லுகிருர். புரட்சி மணங்கமழும் பூஞ்சோலை நிறைந்த புது உலகிற்கு மக்களை அழைக்கிருர்! பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப் பேசு சுயமரியாதை உலகு எனப் பேர் வைப்போம் என அறைகூவி அழைக்கிருர்! புரட்சியில் மலரும் புது உலகத்திற்கு நம்மை அழைக்கிருர்! நாமும் புன்முறுவலோடு போவோம்! புரட்சிக் கவிஞனல் தான் புரட்சியில் பூக்கும் புது உலகிற்கு நம்மை அழைத்துச் செல்லமுடியும்!

*

6-5-55 ல், மீண்டும்

புதையல்

★

"புதையுண்ட கண்மணியை மீண்டும் தோண்டி எடுக்க விரும்பவில்லை. அரிவாளில் ஒட்டிக் கொண்டிருந்த என் தங்கையின் ரத்தத்தை முத்தமிட்டேன். கண்களில் ஒத்திக் கொண்டேன். பின் கால் போன பக்கம் நடந்தேன்..."

துரை தன் கதையை முடிக்கவில்லை-துடித்து நின்றீர்கள்; அடுத்த இதழ் எப்போது வருமென்று! ஆனல் தொடர்ச்சி அறுந்து விட்டது—"இனி தொடராதோ" என ஏங்கியவர்க்கு மகிழ்ச்சியளிக்கும் விதத்திலே இதோ "புதையல்" மே 6-ம்நாள் முதல் வருகிறது. புதையலை இதுவரை படிக்காத புதிய வாசகர்களுக்கு ஒரு நல்வாய்ப்பு அளிக்கிறேம். மே-6 ம் நாள் இதழில் நடந்த கதை முழுதும் தருகிறேம். அதோடு அந்த இதழிலேயே புதிய தொடரும் ஆரம்பமாகிறது.

Edited, Printed and published by M. Karunanithi at Murasoli Press, 4/128, Mount Road, Madras-6.